# படிப்பு உதவிகள்

# சபையில் பெண் ஊழியக்காரிகள்

## ஜேம்ஸ் பேலிஸ்[1]

புதிய ஏற்பாட்டு சபையில் "உதவிக்காரிகள்" இருந்தனர் என்பதற்கு நம்பத்தகுந்த சாட்சியங்கள் எதுவும் நமக்கு இல்லையென்றாலும், சபையில் நிச்சயமாகவே பெண் ஊழியக்காரிகள் இருந்துள்ளனர். சபையின் விசேஷித்த ஊழியத்தைச் செய்வதற்குப் பெண்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர் என்பதை நிரூபிப்பதற்காக, நாம் "உதவிக்காரி" என்ற பதவி இருந்தது என்று நிரூபிக்க அவசியம் இல்லை. இவ்விதமாக, இப்படிப்பட்ட தொழில்ரீதியான ஒரு பதவி இருந்ததா இல்லையா என்ற கேள்விக்குத் தீர்வு காண்பது அவசியமில்லை; ஏனெனில் ஊழியம் நிலவுகிறது. மற்றும், ஒரு பதவியில் இருப்பதாக அங்கீகரிக்கப்படாதிருக்கும்வரையில் சபையில் ஊழியம் செய்யாதிருக்கும் ஒரு பெண், அப்படிப்பட்ட பதவி ஒன்று இருந்தால் ஒருவர் அவளை அந்தப்பதவியில் வைக்க விரும்பும் வகையிலான கிறிஸ்தவளாய் இருக்கமாட்டாள்.

### சபையில் ஊழியர்கள்

பவுலின் ஊழியத்தில் அவருக்குப் பெண்கள் உதவிசெய்தனர். பிலிப்பியில் இருந்த சபையார், பவுலுடன் ஊழியம் செய்வதற்காக ஒரு சகோதரரை அனுப்பி வைத்தனர் (பிலிப்பியர் 2:25-28). எப்பாப்பிரோதீத்து [என்ற இந்த நபர்], பவுலுடன் ஊழியம் செய்ததில், "கிறிஸ்துவின் ஊழியத்தை" நிறைவேற்றினார் (பிலிப்பியர் 2:29, 30). பிலிப்பியில் இருந்த சபையாரிடத்தில் பவுல், சுவிசேஷ ஊழியத்தில் தம்முடன் உழைத்திருந்த இரு பெண்களுக்கு [பின்வருமாறு] வேண்டுகோள் விடுத்தார்:

> கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன். அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூட, சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது (பிலிப்பியர் 4:2, 3).

இந்த பெண்கள் கர்த்தருடைய ஊழியத்தில் உதவியாய் இருந்தனர், மற்றும் அவர்களுக்கு சபை உதவ வேண்டும் என்பதும் சரியே.

*சபைகள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கென்று பெண்களைத் தேர்ந்தெடுத்து ஆதரித்தன. இவ்விதமாகப் பவுல் பின்வருமாறு கூறினார்,*

> *கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக் கேற்றபடி ஏற்றுக்கொண்டு, எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்; அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள் (ரோமர் 16:1, 2).*

*அவள் செய்த ஊழியம், அவள் ஊழியக்காரியாய் இருந்த சபையினால் காணக்கூடிய இடத்துடன் சுருங்கியிருக்கவில்லை. ரோமர் 16:1, 2ல் பவுல், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள், "கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய" அவளை ஏற்றுக்கொண்டு உதவிசெய்ய வேண்டும் என்று கூறினார். அவள் பவுலுக்கும் மற்றும் பலருக்கும் உதவியிருந்தாள். அவள் ஒரு அறிமுக மற்றும் பாராட்டுக் கடிதத்துடன் பயணித்தாள் என்பதுபோலுள்ளது; ஏனெனில் இவ்விடத்தில் பவுல் பெபேயாளை ரோமாபுரியிலிருந்த சபைக்கு அறிமுகப்படுத்திவைத்து அவளுக்கு உதவி செய்யும்படி வேண்டுகோள் விடுத்தார்.*

*நைஜீரியாவில் பலருக்கு ஊழியம் செய்கின்ற, மருத்துவத் தாதிகளாக உள்ள சில கிறிஸ்தவப்பெண்கள் சபையினால் ஆதரிக்கப்படுகின்றனர். அவர்கள் சுவிசேஷத்தை வெளியரங்கமாகப் பிரசங்கிப்பவர்கள் அல்ல, ஆனால் அவர்கள் சபையில் செயல்விளைவுமிக்க ஊழியக்காரிகளாக உள்ளனர். ஒரு சபையானது - பொருத்தமானதாகக் கண்டால், தேவை நிலவினால், மற்றும் சபையினால் முடியுமென்றால் - சமூகத்தில் நோய்வாய்ப்பட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்கென்று ஒரு முழுநேரப் பணியாளாக, மருத்துவத்தாதி ஒருவரை நியமித்து ஆதரிக்கக்கூடும்; ஏனெனில் கர்த்தரின் ஊழியத்திற்கென்று தங்களை அர்ப்பணித்துள்ள வர்களை, பலருக்கு உதவுபவர்களாக இருப்பவர்களை ஆதரித்தல் என்பது சரியானதாகவே உள்ளது. இருப்பினும், சபைகூடிவரும் கட்டிடத்திற்கு வாயிற்காவலராக இருப்பவருக்கு ஊதியம் அளிக்கின்ற சில சபைகள் (இது ஏற்புடைய ஊழியமே), பரிசுத்தவான்கள் மற்றும் பாவிகள் ஆகியோருடைய சரீரத் தேவைகளைக் கவனிக்க ஒரு மருத்துவத்தாதியை அமர்த்துதல் பற்றிச் சிந்தித்தலை புறம்பானதாக நினைக்கின்றன.*

*இது, சபையின் ஊழியர்கள் யாவரும் சபையினால் பொருளாதார ரீதியில் ஆதரிக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிப்பதாக இருப்பதில்லை. எவரொருவரும் ஊதியமின்றி ஊழியம் செய்யமாட்டார் களென்றால், நாம் ஆவிக்குரிய வகையில் ஏழ்மையான சபையையே கொண்டிருப்போம்!*

*சபையில் எண்ணற்ற வகையில் ஊழியம் செய்யும்படிப் பெண்கள் மூப்பர்களால் கேட்டுக்கொள்ளப்படலாம். அவர்கள் கர்த்தருடைய பந்திக்கான பொருட்கள் ஆயத்தமாக இருக்கின்றனவா என்று*

கவனிக்கலாம்; அவர்கள் பெண்களை ஞானஸ்நானப்படுத்துவதில் உதவலாம்; அவர்கள் வீடு சந்திப்பு ஊழியம் செய்யலாம்; அவர்கள் இன்னும் மற்ற பல வழிகளில் உதவியாய் இருக்கலாம்.

கிறிஸ்தவப்பெண்கள், 1 தீமோத்தேயு 3:11ல் உள்ள பண்புகளில் சிலவற்றையாவது பொதுவாகக்கொண்டிருக்க வேண்டும் என்று பவுல் காண்பித்தார். அவர், தீத்து 2:3ல், முதிர்வயதுள்ள பெண்கள் "பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களாய் இருக்கவேண்டும்" என்று கூறுகையில், 1 தீமோத்தேயு 3:11, பெண்கள் "அடக்கமுள்ளவர்களாய்" இருக்க வேண்டும் என்று கூறுகிறது. முதிர்வயதுள்ள பெண்கள், தெளிந்தசிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி இளம்வயதுப்பெண் களுக்குப் போதிக்க வேண்டும் (தீத்து 2:3-5; ASV). அவர்கள் தாங்களே தெளிந்த சிந்தையுள்ளவர்களாய் இராவிட்டால், இதைச் செய்வது அவர்களுக்குக் கடினமாயிருக்கும். இளம்வயதோ அல்லது முதிர்வயதோ, பெண்கள் புறம்கூறுபவர்களாய் இருக்கக்கூடாது. பெண்கள் அடக்கமுடையவர்களாய் இருக்க வேண்டும் என்றும் (1 தீமோத்தேயு 3:11) முதிர்வயதுள்ள பெண்கள் "மதுபானத்திற்கு அடிமையாய்" இருக்கக்கூடாது (தீத்து 2:3) என்றும் பவுல் குறிப்பிட்டார்.

முதிர்வயதுள்ள பெண்கள், "வேதவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும்" வேண்டும் (தீத்து 2:4, 5). 1 தீமோத்தேயு 3:11ல் பவுலினால் கூறப்பட்ட பெண்கள் "எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாய்" இருக்க வேண்டும்; இந்தப் பொதுவான விவரிப்பு, பக்குவம்வாய்ந்த எந்தக் கிறிஸ்தவப் பெண்ணுக்கும் பொருத்த மானதாக இருக்க வேண்டும்.

இவ்வகையான ஊழியக்காரிகள் சபைக்கு மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த ஊழியத்தைச் செய்யும்படி அவர்களை மூப்பர்கள் நியமிக்க வேண்டியதில்லை, ஏனெனில் அவர்கள் பவுலின்மூலமாக தேவனால் இந்த ஊழியத்திற்கென்று நியமிக்கப்பட்டுள்ளனர். தீத்துவுக்குப் பவுல், "ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றவைகளைப் பேசு" என்று கூறினார் (தீத்து 2:1), இதில் முதிர் வயதுடைய பெண்களுக்கென்று குறிப்பிட்ட அறிவுறுத்தல்களும் உள்ளடங்கியிருக்கிறது (தீத்து 2:3). சிலர் குறிப்பிடப்பட்ட ஊழியங்களுக்கென்று மூப்பர்களால் நியமிக்கப்பட் டிருக்கலாம்; ஆனால் ஊழிய வாய்ப்புக்களைக் கண்டறியவும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவும் பெண்கள் இவ்விதமாக நியமிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

## சபையில் விதவைகள்

தொடக்ககால சபையில் இருந்த சில விதவைகள், சபையினால் ஆதரிக்கப்பட்ட விதவைகளின் ஒரு விசேஷித்த குழுவின் அங்கமாகப்

*பட்டியலிடப்பட்டிருந்தனர் (1 தீமோத்தேயு 5:9). அவர்கள் சில தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. முதலாவது, தங்கள் வாரிசுகளால் ஆதரவு எதுவும் அளிக்கப்பட்டிராத நிலையிலேயே சபையினால் ஆதரிக்கப்பட வேண்டியிருந்தனர் (1 தீமோத்தேயு 5:3, 4, 16) அவர்கள் கைவிடப்பட்டவர்களாய் இருந்தனர் (1 தீமோத்தேயு 5:5; ASV). இரண்டாவது, அவர்கள் குறைந்தபட்சம் அறுபது வயதுடையவர்களாய் இருக்க வேண்டியிருந்தது. மூன்றாவது, அவர்கள் வீட்டு விஷயங்களில் அனுபவமுடையவர்களாய் இருக்க வேண்டியிருந்தது; அவர்கள் பிள்ளைகளை வளர்த்திருக்க வேண்டும். நான்காவது, அவர்கள் அந்நியர்களை உபசரித்தல், பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவுதல் என்ற சிறுமையான செயல், மற்றும் பெருந்துயரத்தில் இருப்பவர்களுக்கு நிவாரணம் அளித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய, தங்களின் நற்செயல்களினால் அறியப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். உண்மையில், அவர்கள் "சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்தவர்களாய்" மற்றும் "நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவர்களாய்" இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 5:10). இவர்களே சபையினால் உதவிபெறத்தக்க "விதவைகளாய்" இருந்தனர் (1 தீமோத்தேயு 5:16).*

*இந்தப்பெண்கள் சபைக்குச் செய்த பணிகள் யாவை? ஜெபிக்கும் பெண்கள் என்ற வகையில் - எல்லாக் கிறிஸ்தவர்களும் ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளனர் - அவர்கள் பொதுவில் சபைக்காகவும் குறிப்பாகத் தனிநபர்களுக்காகவும் ஜெபிப்பார்கள். அவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்த மற்றும் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கும் பெண்களாய் இருந்தனர். அவர்கள் தங்கள் ஜெபவாழ்வில் அவ்வப்போது ஈடுபடுகிறவர்களாயிராமல், "இரவும் பகலும் வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்திருப்பவர்களாய்" இருந்தனர் (1 தீமோத்தேயு 5:5). இருப்பினும், அவர்கள் ஜெபித்தல் தவிர வேறெதுவும் செய்யாத பெண்களாக இருந்ததில்லை. ஜெபம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருடைய வாழ்விலும் அத்தியாவசியமான பாகமாக உள்ளது. ஆனால் கிறிஸ்தவ வாழ்வு என்பது ஜெபத்தினால் மாத்திரம் வாழப்படுவது இல்லை. நம் எல்லாருக்கும் பல்வேறு பொறுப்புகள் வருகின்றன, அந்த விதவைகள் தங்களின் திறமை, பயிற்சி, மற்றும் பலம் ஆகியவற்றிற்கு ஏற்ற (ஈடான) பொறுப்புக்களைக் கொண்டிருந்திருப்பார்கள். அவர்கள் திறம் வாய்ந்த வகையில் குடும்பத்தைக் கட்டியெழுப்பியிருந்தபடியால், அவர்கள் இளம் பெண்களுக்கு உதவியாக இருக்க முடியும். அவர்கள் உபசரிப்புக்காண்பித்தல் எப்படி என்றும் துன்புற்றவர்களுக்கு உதவிசெய்வது எப்படியென்றும் அறிந்திருந்தபடியால், அவர்கள் அப்படிப்பட்ட பொறுப்புநிலைகளில் சபையில் ஊழியம் செய்ய முடியும்.*

*யோப்பாவில் இருந்த சபையின் உறுப்பினர்களில் விதவைகளும் இருந்தனர்:*

*யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள்*

*என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்தி வைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில், இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, ''தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று'' சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச்சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழந்துநின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான் (நடபடிகள் 9:36-41).*

*தொற்காள் என்பவள் சபையினால் ஆதரிக்கப்பட்ட விதவைகளின் பட்டியலில் இருந்தாள் என்று வேதவசனங்கள் கூறுவதில்லை. கைவிடப்பட்ட விதவைகளே சபையினால் ஆதரிக்கப்பட்ட விசேஷித்த குழுவில் இருந்தனர் (1 தீமோத்தேயு 5:3-5;* ASV*); அவர்கள் தங்களை ஆதரிக்க எவரொருவரும் இல்லாதிருந்தனர். அவர்களுடைய வாரிசுகள் யாரேனும் அவர்களை ஆதரிக்கக்கூடுமென்றால். சபையின்மீது பாரம் சுமத்தாதிருக்கும்படி அவர்கள் அதைச் செய்ய வேண்டியிருந்தது. தன்னைத் தானே போஷித்துக்கொள்ளக்கூடிய விதவைகளின் விஷயத்திலும் இது உண்மையாய் இருந்தது. அவள் தன்னைத்தானே போஷித்துக்கொள்ளக் கூடுமென்றுல், சபை தன்னைப் பராமரிக்கும்படி அவள் சபையின்மீது சுமையைச் சுமத்தக் கூடாதிருந்தது. நிச்சயமாகவே விதவைகளாய் இருப்பவர்களுக்கு மாத்திரம், சபை ஆதரவு அளிக்க வேண்டியிருந்தது (1 தீமோத்தேயு 5:16). தொற்காள் தன்னைத்தானே பராமரித்துக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பொருள்படைத்தவளாய் இருந்தாள் என்று காணப்படுகிறது, ஏனெனில் அவள் மற்றவர்களுக்குப் பல நல்ல செயல் களை செய்யக்கூடியவளாய் இருந்தாள். அவள் "நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டுவந்தாள்'' என்று விவரிக்கப்படுகின்றாள் (நடபடிகள் 9:36). அவள் ''மெய்யாகவே விதவையாக'' இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிறிஸ்துவுக்கென்று நற்செயல்களைச் செய்து அதன்மூலம் சபைக்கு ஊழியம் செய்தாள். அவள் விதவைகளுடன் இணைவுகொண்டிருந்தாள், மற்றும் அவர்கள்*

அவளிடத்தில் விசேஷித்தவிதமாக நெருங்கியிருந்தனர். தொற்காள் மரித்தபோது, "விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் (பேதுருவை) சூழ்ந்து நின்றார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (நடபடிகள் 9:39). ஆயினும், "தங்களுடனேகூட இருக்கையில்" என்பது, விதவைகளில் ஒருத்தியாக அவள் "அவர்களுடனே கூட இருந்தாள்" என்று மாத்திரம் அர்த்தப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை; இது "அவள் உயிருடன் இருக்கையில்" என்று மாத்திரம் அர்த்தப்படுவதாயிருக்கலாம். அவளுக்குக் குடும்பம் இல்லாதிருந்தது என்ற விஷயமானது, அவள் உயிர்ப் பிக்கப்பட்டபோது அவளை அவளது குடும்பத்தினருக்கு ஒப்புவித்தல் பற்றி ஏதொன்றும் கூறப்படவில்லை என்பதை மறைமுகமாய் உணர்த்திற்று; ஆனால் "பரிசுத்தவான்களுக்கும் விதவைகளுக்கும்" (நடபடிகள் 9:41) ஒப்புவிக்கப்பட்டாள். வசனம் காண்பிக்கிறபடி, தொற்காள் ஒருக்காலும் திருமணமாகாதவளாக இருந்திருக்கின்றாள்; ஆனால் அவள் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தவளாக இருந்தாள்; சபையில் விதவைகளின் குழு இருந்தது.

சிலர், 1 தீமோத்தேயு 3:11ன் பெண்கள், 1 தீமோத்தேயு 5:3ல் கூறப்படும் "மெய்யான விதவைகளாக" இருந்தனர் என்று நினைக்கின்றனர். 1 தீமோத்தேயு 3:11ன் பெண்கள் விதவைகளுக்குரிய தகுதிகளில் இந்த விதவைகள் கண்டிப்பாக வரையறைப்படுத்தப்படவில்லை என்றாலும், இவர்கள் 1 தீமோத்தேயு 3:11ன் தகுதிகளைக் கொண்டிருப்பார்கள். இந்தப் பெண்கள் "மெய்யான விதவைகளாய்" இருந்திருக்க வேண்டுமென்றால், அவர்களை இவ்விதமாக குறித்திருப்பது பவுலுக்கு எளிதாய் இருந்திருக்கும்; ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. பவுல் 1 தீமோத்தேயு 3:11ன் கலந்துரையாடலில் விதவைகளைப் பற்றிய கூற்று எதையும் தொடரவில்லை.

விதவைகள் நிச்சயமாகவே, தீத்து 2:3ல் உள்ள "முதிர் வயதான பெண்களின்" ஊழியத்தைச் செய்யக்கூடியவர்களாகவே இருப்பார்கள், ஆனால் "முதிர் வயதுள்ள பெண்கள்" "விதவைகளுக்கு" உரிய அதே தகுதியமைவு கொண்டிருக்க வேண்டும் என்று ஏதொன்றும் சுட்டிக்காண்பிப்பதில்லை.

## முடிவுரை

பெண்கள் தங்களின் திறன்களைக் கொண்டு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யலாம், தொற்காளை போன்ற சிலர் ஊசிகள் மற்றும் நூல் ஆகியவற்றைக் கொண்டு செய்ய முடியும். நாம் விவரித்து இருக்கின்ற பணிப் பொறுப்புக்கள் யாவற்றிலும் புதிய ஏற்பாட்டு சபையின் பெண்கள் ஊழியம் செய்துள்ளனர். அவர்கள் தங்களின் திறன், பயிற்சி, வாய்ப்புக்கள் மற்றும் சபையில் பெண்களின் நிலைப்பாட்டை முறைப்படுத்தும் வேதாகமக்கொள்கைகள் ஆகியவற்றுடன் இசைவான வகையில் வேறு எந்த வழிகளிலும் ஊழியம் செய்யவும் முடியும். ஒவ்வொரு சபைக் குழுமமும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அவ்வாறு தேர்ந் தெடுக்கப்படாத பெண் ஊழியக்காரிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு

சபைக்குழுமமும் தான் சார்ந்திருக்கக்கூடிய மற்றும் வேண்டுகோள்விடுக்கக் கூடிய அல்லது குறிப்பிட்ட தேவைகளில் தாமாகவே பதில்செயல் செய்யக் கூடிய பெண்களைக் கொண்டுள்ளது.

---

குறிப்பு

[1]This lesson is an excerpt from James Bales, *The Deacon and His Work* (Shreveport, La.: Lambert Book House, 1967), 79-83. Adapted and used by permission.

# 1 கொரிந்தியர் 11ல்

## நீல் லைட்ஃபுட்[1]

*கிரேக்க சமுதாயத்தில் பெண்ணின் நிலையானது காலம் மற்றும் இடம் ஆகியவற்றிற்குத் தக்கவாறு மாறுபட்டது, ஆனால் பெரும்பாலும் அது ஆணின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. பொதுவாகப் பெண் வீட்டு விஷயங்கள் தவிர வேறு கல்வியறிவு எதுவும் இல்லாதவளாகவே இருந்தாள்; அவள் அரசியல் வாழ்வில் பங்கேற்கவில்லை, மற்றும் மனைவியாகவோ, ஆசைநாயகியாகவோ அல்லது அடிமையாகவோ எப்படியிருந்தாலும் அவள் ஆணின் உடைமையாகவே இருந்தாள். ரோமப் பெண்கள் அதிகமான சுதந்திரத்தை, விசேஷமாக குடியரசின் பிந்திய நாட்களில் மகிழ்வுடன் அனுபவித்தனர்; கிறிஸ்தவ யுகத்தின் தொடக்கத்தில், பெண்ணின் இடமானது பல அம்சங்களில் ஆணின் இடத்திற்குச் சமமானதாக இருந்தது.*

*சமானநிலையற்ற இந்தப் பின்னனிக்கு எதிராக, இயேசுவின் உதாரணத்தைப் பின்தொடர்ந்து பவுல், நற்செய்தியை பெண்களுக்குப் போலவே ஆண்களுக்கும் அறிவித்தார். அவர் பிலிப்பி நகரத்தில் லீதியாளுக்கும் மற்ற பெண்களுக்கும் (நடபடிகள் 16:13), மக்கெதோனியாவின் கனம்பொருந்திய பெண்களுக்கு தெசலோனிக்கே நகரத்திலும் (நடபடிகள் 17:4), பெரேயா நகரத்திலும் (நடபடிகள் 17:12) பிரசங்கித்தார். அவர் தமது நிருபங்களில் ஆண்கள் பெண்கள் ஆகிய இருசாராருக்கும் வாழ்த்துதல் தெரிவித்தார் (ரோமர் 16; பிலேமோன் 2). அவர் இருமுறை, பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லா என்ற இருபாகக் குழுவிற்கு வாழ்த்துதல் தெரிவித்தார், அதில் பிரிஸ்கில்லாளின் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டது (ரோமர் 16:3, 4; 2 தீமோத்தேயு 4:19). ரோமர் 16ல் பவுல் பதினெட்டு ஆண்களையும் பதினொரு பெண்களையும் பெயர்குறிப்பிட்டு வாழ்த்தினார். அவர் மற்றவர்களையும் குறிப்பிட்டார்: லோவிசாள் மற்றும் ஐனிக்கேயாள் (2 தீமோத்தேயு 1:5); பிலிப்பி நகரில் "சுவிசேஷத்தினிமித்தம் [அவருடன்] பிரயாசப்பட்ட யெயோதியாள் மற்றும் சிந்திக்கேயாள்" (பிலிப்பியர் 4:2, 3); மற்றும் கொரிந்து நகரில் குலோவேயாள் (1 கொரிந்தியர் 1:11). குலோவேயாளின் வீட்டில் இருந்த சுயாதீனர் அல்லது அடிமைகள் மூலமாகப் பவுல், கொரிந்து நகரில் இருந்த சபையின் இடர்ப்பாடுகளைப் பற்றி அதிகமாய் அறிந்து கொண்டார். ஆகையால் பவுல், கொரிந்து நகரில் பெண்கள் முக்காடு இடுதல் பற்றி எழுதும்போது, அவர் பெண்களை முற்றிலுமாகப் பழிக்கும் வகையிலான வகையில் எழுதவில்லை என்பது நினைவில் வைக்கப்பட வேண்டும்.*

## சிரமங்களுக்கு காரணம்

1 கொரிந்தியர் 11ம் அதிகாரத்தைப் புரிந்துகொள்வதைப் பல காரணிகள் சிரமமாக்குகின்றன. நாம் பழங்கால உலகத்தின் கலாச்சாரத்தைப் பற்றி அறிய விரும்பும் அளவுக்கு அறிந்திருப்பதில்லை என்பது முதல் சிரமமாக உள்ளது. எல்லா இடங்களிலும் பழங்காலப் பெண்கள் பொது இடத்தில் முக்காடிட்டுக் கொண்டிருந்தனர் என்று தைரியமாய் உறுதிப்படுத்தப்படுவது வழக்கமாக உள்ளது. இந்தக்கூற்றை, விளக்கவுரைகள் பல திரும்பத் திரும்பக் கூறுகின்றன, ஆனால் இது இப்போது, இந்தக் கருத்தைப் பற்றிய விசேஷநிபுணத்துவம் கொண்டவர்களிடையில் உண்மையான கருத்து வேற்றுமையின் விஷயமாக உள்ளது, அதிலும் விசேஷமாக கிரேக்கப் பெண்களின் தலையணியைக் குறித்த விஷயத்தில் இந்தக் கருத்து வேறுபாடு அதிகமாக உள்ளது. கிரேக்கப் பெண்கள் பொது இடங்களில் எப்போதுமே முக்காடு இட்டுக்கொள்ள வேண்டிய கடமை கொண்டிருக்கவில்லை என்பதற்கான குறிப்பை நாம் கண்டறிகின்றோம். சில வேளைகளில், விழாநாள் ஊர்வலங்களில் பெண்கள் பற்றி விபரமாய் விவரிக்கப்படுகிறது, அதில் முக்காடு பற்றிய குறிப்பிடுதல் எதுவும் இருப்பதில்லை. பேரரசிகளும் பெண்தெய்வங்களும் முக்காடு இல்லாதிருக்கும் நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மறுபுறத்தில், கி.பி. முதல் நூற்றாண்டின் கடைசியில் எழுத்தாளராய் இருந்த புளூடார்க் என்பவர் மாறுபட்ட ஒரு சித்தரிப்பை முன்வைத்தார். ஸ்பார்ட்டா நகரத்துச் சிறு பெண்கள் பொது இடங்களில் முக்காடு இன்றிச் செல்லுகையில், திருமணமான பெண்கள் முக்காடு அணிந்து சென்றதாக கூறினார்.[2] பெண்கள் பொது இடங்களுக்குத் தலைகளை மூடிக்கொண்டு செல்வதும் ஆண்கள் தங்கள் தலைகளை மூடாமல் செல்வதும் வழக்கமாயிருந்தது என்று அவர் மனப்பூர்வமாகக் கூறினார்.[3] இருப்பினும், இதே தொடர்பில் அவர், இதற்குமுன் பெண்கள் தங்கள் தலைகளை மூடிக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததில்லை என்றும் கூறினார்.[4] அதேபத்தியில் புளூடார்க், ஆண்கள் தங்கள் தலைமுடியை வெட்டிக்கொள்வதும் பெண்கள் தங்கள் தலைமுடியை வளர்த்துக்கொள்ள அனுமதிப்பதும் வழக்கமாய் இருந்தது என்றும் கூறினார்.

பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் பற்றி புளூடார்க்கின் கூற்று, கிழக்கு நாடுகளில் உலகளாவிய நடைமுறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள செயலினால் ஆதாரப்படுத்தப்படுகிறது. தர்சு நகரில் ஒரு பெண் வெளியே செல்லும்போது அவள் கனமான முக்காடு இட்டுச் சென்றாள்.[5] எருசலேமில், ஒரு பெண் தனது வீட்டை விட்டுச் செல்லும்போது, அவள் தனது தலையை இரண்டு முக்காடுகளினால் மூடிக்கொண்டு சென்றாள்; அவள் முக்காடு இன்றி வெளியே கிளம்பிச்சென்றால், அவள் மானக்கேடாக நடந்தாள் என்ற காரணத்திற்காக அவளைத் தள்ளிவைக்கும் உரிமை மற்றும் கடமையும்கூட அவளது கணவருக்கு இருந்தது.[6] தூரகிழக்கு நாடுகளில், அசீரியர்களின் மத்தியில், இந்தச் சட்டம் இன்னும் அதிக கண்டிப்பானதாக இருந்தது: பெண்கள் முக்காடு இடப்பட்டனர்; வேசிகள் எப்போதுமே முக்காடு இன்றி மரணத்தின் அச்சுறுத்தலில் இருக்க வேண்டியதாக இருந்தது.[7]

கொரிந்து நகரில் இருந்த சபையின் குறிப்பிட்ட பிரச்சனைகளைப் பற்றி நாம் போதிய அளவுக்கு அறிவதில்லை என்பது இரண்டாவது பிரச்சனையாக உள்ளது. அங்கிருந்த கிறிஸ்தவர்கள் பவுலுக்குக் கடிதம் எழுதி அதில் குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்டிருந்தனர் (1 கொரிந்தியர் 7:1). இந்தக் கேள்விகளுக்கு அவரது பதில்கள் 7ம் அதிகாரத்தில் தொடங்குகின்றன; பவுலின் பதில்களுக்குக் குறிப்புகள் ("now concerning") "காரியங்களை குறித்து" என்ற வார்த்தைகளில் தரப்படுகின்றன (7:1; 8:1; 12:1). இந்தக் குறிப்புகளைத் தொடர்ந்து, நாம் இந்தக் கேள்விகளில் சிலவற்றை ஒன்றுகூட்ட முடிகிறது; ஆனால் நம்மால் மறைமுக மாக மாத்திரம் புரிந்துக்கொள்ளப்படக்கூடிய பவுலின் பதில்களை மட்டுமே நாம் கொண்டிருக்கின்றோம். இதை நாம் ஒரு பக்கத்தில் இருந்து மாத்திரமே கேட்கப்படக்கூடிய உரையாடல் கொண்ட ஒரு தொலைபேசி உரையாடலுடன் ஒப்பிடலாம். கொரிந்தியர்கள் பல விஷயங்களைப் பற்றி பவுலுக்கு எழுதியிருந்தனர். அவர்களின் கடிதங்கள் நம்மிடத்தில் இல்லை; அதாவது, மேற்கூறப்பட்ட அவர்களின் தொலைபேசி உரையாடல் என்ற உவமையைப் பயன்படுத்துவதென்றால், நாம் அந்த உரையாடலில் அவர்களின் (கொரிந்தியர்களின்) பேச்சைக் கேட்க முடிவதில்லை. நாம் பவுல் கூறுவதை மாத்திரம் கேட்க முடிகிறது, மற்றும் அவரது வார்த்தைகள் பெரும்பாலும் நமக்கு நன்கு பழக்கமற்ற விஷயங்களைப் பற்றியதாக உள்ளது. இது, முக்காடுகள் பற்றிய வசனப்பகுதி நமக்கு ஏன் இவ்வளவு சிரமமானதாக உள்ளது என்பதை விளக்க நமக்கு உதவ வேண்டும்.

## பவுல் கூறியது என்ன

ஒன்று கொரிந்தியர் 11:2ல் வசனம், பொது ஆராதனையைப் பற்றிக் கூறும் ஒரு புதிய பகுதியைத் தொடங்குகிறது. இவ்வதிகாரத்தின் கடைசிப்பகுதியானது சந்தேகத்திற்கிடமின்றி, பொது ஆராதனை பற்றியதாக உள்ளது, வசனம் 2ல் "நான் உங்களைப் புகழுகிறேன்" என்பதற்கும் வசனம் 17ல் "நான் உங்களைப் புகழேன்" என்பதற்கும் இடையில் நாம் ஒரு நெருங்கிய தொடர்பைக் காணுகின்றோம். மேலும் வசனம் 4ம் 5ம், சபைகூடிவரும்போது [அன்றைய நாட்களில் நடைபெற்ற] ஜெபித்தல் மற்றும் தீர்க்கதரிசனம் உரைத்தல் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. ஒருமுனை உரையாடலை [மாத்திரம்] நாம் கேட்டிருந்தாலும், அடுத்த முனையில் என்ன கூறப்பட்டது என்பதை நாம் யூகிப்பது ஓர் அளவுக்கு சாத்தியமானதாகவே உள்ளது, எனவே ஒருவேளை நம்மால், கொரிந்து நகர் கிறிஸ்துவின் சபையில் நிலவிய சூழ்நிலையைப் பற்றிய சில விஷயங்களை மறுகட்டுமானம் செய்வதும் சாத்தியமாயிருக்கலாம். கொரிந்து நகரில் இருந்த ஆண்களும் பெண்களும் ஆவியானவரின் விசேஷமான கொடைகள் அருளப்பட்டவர்களாய் இருந்தனர் (1 கொரிந்தியர் 12:4-31). இந்த வரங்களில் தீர்க்கத்தரிசனம் உரைத்தல், ஆவியானவரால் ஏவப்பட்ட போதனைகளைக் கொடுக்கக் கூடியவராகுதல் ஆகியவை உள்ளடங்கியிருந்தன. பெண்களுங்கூடத் தீர்க்கதரிசனம் கூற முடிந்திருந்தது. அவர்கள் தங்களுடைய தீர்க்கதரிசன வரத்தை

ஆண்கள் முன்னிலையில் செயல்படுத்தக்கூடியவர்களாய் இருந்தார்களா? அப்படியென்றால், அவர்கள் ஒரு தெய்வீக செய்தியை முக்காட்டின்கீழ் கொடுக்க வேண்டியிருந்ததா அல்லது அவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்கள் சுயாதீனத்தை பயன்படுத்தத் தங்கள் முக்காடுகளை நீக்கிப்போட்டு தேவனுடைய ஒரே குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் மத்தியில் சுதந்திரமாகத் தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டியிருந்ததா? இவைபோன்ற கேள்விகளைக் கொரிந்தியர்கள் பவுலிடம் முன்வைத்திருந்தனர் அல்லது இவைபோன்ற விஷயங்கள் குலோவேயாளின் வீட்டாரால் பவுலிடம் உரைக்கப்பட்டிருந்தன. இவைகள் கொரிந்தியர்களுக்கும் பவுலுக்கும் முக்கியமான கருத்திற்குரிய விஷயங்களாய் இருந்தன, ஏனென்றால் பழங்கால உலகமானது உடையணியும் விதத்தை, தேசீயக் கலாச்சாரங்கள் அல்லது ஒழுக்கரீதியான பழக்கங்கள் என்பதன் சுட்டிக்காட்டுதல்களாகக் கண்ணோக்கிற்று. கலாச்சாரம் எதுவாயிருப்பினும், அதில் இருந்து விலகிச்செல்லாதிருத்தலில் பழங்காலத்திய மக்கள் மிகுந்த கவனமாய் இருந்தனர்.

கொரிந்தியர்களுக்குப் பவுல், பொது கூடுகைகளில் அவர்களின் பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்று தெளிவாக கூறினார், இது புளூடார்க் என்பவரால் பேசப்பட்டதான முதல் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்த கலாச்சாரங்கள் கொரிந்து நகரில் வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. அவர்களின் சமூகத்தில், ஒரு பெண் தனது தலைமுடியை வெட்டிக்கொள்வதோ அல்லது வெறுமையான தலையுடன் ஜெபிப்பதோ வழக்கத்தில் இல்லாத ஒன்றாய் இருந்திருக்காத வரை அவர் இவ்வாறு அழுத்தமாக வாதிடுதல் என்பது அரிதானதாகவே இருக்கும். பவுலின் விவாதத்தைப் பின்வரும் நான்குமடங்கு வடிவமைப்பின்படி மறு உருவப்படுத்த முடியும்.

1. இறையியல் விவாதம். இந்த விவாதமானது தேவனை மையப்படுத்தியிருப்பதால் “இறையியல் சார்ந்ததாக” உள்ளது. இவ்விடத்தில் பவுலின் கூற்று கிறிஸ்துவைக் கொண்டு தொடங்கி, ஆண் மற்றும் பெண் ஆகியோர் பற்றிக் கீழிறங்கி பின்பு தேவனை நோக்கி மேல் எழும்புகிறது. பவுல், “தலை” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்: “ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் ...” (வசனம் 3). “தலை” என்பது “தோன்றும் இடம்” என்றோ அல்லது “உயர்தன்மை” என்றோ அர்த்தப்படுகிறது; இதில் பிந்திய சொற்றொடரானது மிகச்சிறப்பாகப் பொருந்துகிறது, ஏனென்றால் வேதவசனங்களில் வேறு எவ்விடத்திலும் தேவனே கிறிஸ்துவுக்கு மூல இடமாக இருக்கின்றார் என்று போதிப்பதில்லை. இருப்பினும், கிறிஸ்து, தேவனுக்குக் கீழ்ப்(படிந்து) இருப்பவராக, அதாவது அவர் மனிதனாக வந்ததில் அவர் தேவனுக்குக் கீழ் இருப்பதாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றார். அதேபோன்று, பெண் அல்லது ஒருவேளை (இவ்விடத்தில் பவுல் கணவர்/மனைவி உறவுமுறையை மட்டும் பேசினார் என்றால்) “மனைவி” என்பவள் ஆணுக்குக் கீழ் பணிப்பொறுப்புக்

கொண்டிருக்கின்றாள். கிறிஸ்து ஆணுக்கு மேற்பட்டவராக இருக்கின்றார், ஆண் பெண்ணுக்கு மேற்பட்டவனாக இருக்கின்றான் மற்றும் தேவன் எல்லாருக்கும் மேற்பட்டவராக இருக்கின்றார் என்று பவுல் போதித்தார். தலையை மூடிக்கொள்ளுதல் என்பது பணிவான நிலை என்பதற்கு அடையாளமாக இருப்பதால், ஆண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுவதும் பெண்கள் முக்காடு இடாதிருப்பதும் கனவீன மானதாயிருக்கும் என்று பவுல் நியாயப்படுத்தினார். பெண் முக்காடு இட்டுக்கொள்ளாமல் காட்சியளிப்பாள் என்றால், அவள் தனது தலைமுடியையும் வெட்டியோ அல்லது சிரைத்தோ விடலாம் - இது கொரிந்து நகரில் தன்னடக்கமற்ற தன்மையின் அடையாளமாய் இருந்தது. 7முதல் 9வரையுள்ள வசனங்களில் பவுல் தமது இறையியல் விவாதத்தைத் தொடருகின்றார். கீழ்ப்படிந்த நிலையில் இருத்தல்பற்றிய பெண்ணின் நிலைப்பாடு படைப்பின் வரிசைமுறையில் ஒரு பாகமாக உள்ளது. ஆண், தேவனுடைய சாயலாக இருக்கின்றான், அவன் அவரது மகிமையைப் பிரதிபலிக்கின்றான்; தேவனைப்போலவே ஆணும் ஆளுகையைச் செயல் படுத்துகின்றான். பெண், ஆணுடைய மகிமையைப் பிரதிபலிக்கின்றாள், ஏனெனில் அவள் அவனது விலாவிலிருந்து எடுக்கப்பட்டு அவனுக்காகப் படைக்கப்பட்டவளாய் இருக்கின்றாள். இதில் பிந்திய விளக்கமானது, பெண் அவனுடைய அடிமையாகவோ அல்லது சுயநலமுள்ள உடைமை யாகவோ அல்ல, ஆனால் அவனுக்கு ஏற்றதுணையாக இருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுகிறது.

2. தூதவியல் விவாதம். பெண் என்பவள் "தூதர்களினிமித்தம்" முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் (வசனம் 10). இது இறையியல் விவாதத்தின் முடிவுரையாகத் தரப்பட்டுள்ள கூடுதல் விவாதமாக இருக்கிறது. இந்தக் கூற்றுக்கு நாம் பிற்பாடு திரும்பி வருவோம்.

3. சமூகவியல் விவாதம். இந்த விவாதம் அவர்களின் சமூகம் சார்ந்ததாக இருந்தபடியால் இது "சமூகவியல்" என்று பெயரிடப்பட முடியும். 13முதல் 15வரையுள்ள வசனங்களில், கொரிந்து நகரில் எது இலட்சணமானதாகவும் ஏற்புடையதாகவும் இருக்கும் என்று அவர்களே முடிவுசெய்யும்படி பவுல் வேண்டுகோள் விடுத்தார். அவர், "நீங்களே நிதானித்துப் பாருங்கள்" என்று கூறினார் (10:15ஐக் காணவும்). "ஒரு ஸ்திரீயானவள் ஜெபம்பண்ணு கையில், தலையை மூடிக்கொள்ளாமலிருப்பது பொருத்தமானது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? ஆணின் முடி குட்டையாயும், பெண்ணின் முடி நீளமாயும் வைத்துக்கொள்ளவேண்டும் என்பது இயற்கையின்படி இல்லையா? ஒரு பெண் நீளமான முடியை வைத்துகொள்ளவேண்டு மென்றால், கூடிவந்திருக்கும்போது அவள் அதை மூடியிருக்க வேண்டும் என்பது அதுதானே ஒரு சுட்டிக்காட்டுதலாய் இருப்பதில்லை."

4. பிரசங்கத்துவ விவாதம். இது பவுலின் கடைசி விவாதமாக உள்ளது, இது சபைகளில் நடைமுறைக்கான ஒரு வேண்டுகோளாக உள்ளது: "ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்" (வசனம் 16). இது, "யாரேனும் ஒருவர் இதைக்குறித்துக்

கலகம் எழுப்பினால் அல்லது இடர்ப்பாட்டிற்குக் காரணமானால், இந்தப் பாடக்கருத்தையே விட்டுவிடுங்கள்" என்று அர்த்தப்படுத்துவதில்லை. முக்காடு இடுதல் பற்றிய நீண்ட விவாதத்தைத் தந்துவிட்டுப் பின்பு பவுல் ஒரு கூற்றில் அந்தப் பாடக்கருத்தைக் கைவிட்டிருக்கமாட்டார். அதேபோல் அவர், "எவரொருவரும் இதைப்பற்றி இன்னும் வாக்குவாதம் செய்ய விரும்பினால், எங்களுக்கோ அல்லது சபைகளுக்கோ வாக்குவாதம் செய்யும் வழக்கம் இல்லை" என்றும் அர்த்தப்படுத்தியிருக்கக்கூடுமா. இங்கு அவருடைய நோக்கம், இருக்கக்கூடிய ஏதாவது எதிர்ப்பிற்குக் கூடுதலான பதில் அளிப்பதேயொழிய சண்டையிடும் ஆவியை குற்றப்படுத்துவது என்பதல்ல. "பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் பற்றி இன்னும் வேறு ஏதேனும் மறுப்பு எழுப்பட்டால், அது அப்போஸ்தலிக்க நடைமுறையாகவோ அல்லது பொதுவாக சபைகளில் உள்ள நடைமுறையாகவோ இருப்பதில்லை" என்றே அவர் கூறியிருப்பார்.

## எழுப்பட்ட கேள்விகள்

பவுலின் போதனையினால் எழுப்பட்ட சில கேள்விகளை நாம் ஆழ்ந்து சிந்திப்போம். இவற்றைச் சுருக்கமாய் நடத்துவதன்மூலம், நாம் இந்தப் பிரச்சனைகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்வோம்.

1. இவ்விடத்தில் பவுல் ஒரு முக்காட்டைப் பற்றி (மட்டும்) பேசினாரா? இதைக்குறித்துப் பல கண்ணோட்டங்கள் பற்றிக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, நீளமான முடி என்பது முக்காடாக உள்ளது, பெண்ணுக்கு அவளது தலைமுடி இதற்காகவே தரப்பட்டுள்ளது (Gk.: *anti,* இது "அதற்குப் பதிலாக" என்று அர்த்தப்படுகிறது) என்பதாகும். *Anti* என்ற கிரேக்க வார்த்தை, பொதுவாகப் பதிலி என்பதைக் குறிக்கிறது; இது, பெண் நீளமான முடியைத் தனக்கு முக்காடாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை என்று கருத்துத் தெரிவிப்பதாயிருக்கும். இருப்பினும், இது 5 மற்றும் 6ம் வசனங்களில் பொருந்துவதில்லை. நீளமான முடியே முக்காடாக இருக்கிறதென்றால், முக்காடு இடாதிருத்தல் என்பது தலைசிரைக்கப்பட்டது போலவே இருக்கும் என்று விவாதிக்க அவசியமில்லை. இது பவுலின் விவாதத்தைக் குழப்பமானதாகவே ஆக்குவதாயிருக்கும்.

முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பது குறிப்பிட்ட ஒரு வகையிலான சிகை அலங்காரமாகும் என்பது இன்னொரு கண்ணோட்டமாய் உள்ளது. ஒரு பெண்ணின் தலைமுடியானது அவளது தலையின்மீது வைத்து கட்டியிருக்கப்பட்டால் அவள் முக்காடு இட்டிருக்கின்றாள் என்று கூறப்பட்டது, அல்லது ஒரு பெண்ணின் தலைமுடியானது ஒழுங்காக வாரிக்கட்டாமல் தளர்வாய்த் தொங்கவிடப்பட்டிருந்தால் அவள் முக்காடு இல்லாதிருக்கின்றாள் என்று கூறப்பட்டது. இந்த கண்ணோட்டமானது, 5ம் வசனத்தில் உள்ள கிரேக்க மொழி விளக்கம், "தலையிலிருந்து கீழே தொங்கவிடுதல்" என்ற நேரடி அர்த்தம் தரும் என்பதை வலியுறுத்துகிறது. இருப்பினும், இது ஒரு ஆடையைக் கொண்டு "தலையை மூடியிருத்தல்" என்று தெளிவாக அர்த்தப்படும் புளூடார்க்கின்

எழுத்துக்களில் காணப்படுகிற அதை வார்த்தைக் கட்டமைப்பின் வலிவைக் காணாது விட்டுவிடுகிறது.[8] அதனால்தான் சொற்பொருள் அகராதிகளும் மொழிபெயர்ப்புக்களும் இவ்வசனப்பகுதியை, தலையின்மீதுள்ள ஒரு முக்காடு என்பதாகவே தரவழைக்கின்றன.

2. 10ம் வசனத்தில் உள்ள சொற்றொடர்களின் அர்த்தம் என்ன? "தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்." இந்தக்கூற்று மிகவும் சிரமமானதாக உள்ளது. அனேகமாக, பவுல் "அதிகாரம்" என்ற வார்த்தையை (இது வேதாகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பில் இல்லை) அது குறிப்பிடுகிற அடையாளத்தின் ஆகுபெயராகப் பயன்படுத்தியிருக்கலாம்: முக்காடு என்பது பெண் கீழ்ப்படிய வேண்டிய அதிகாரத்துவத்தைக் குறிக்கிறது.[9] "தூதர்களினிமித்தம்" இது இருக்க வேண்டும் என்பதற்கு அவசியம் என்ன? இது அனேகமாக, படைப்பின் தெய்வீக முறைமையை உயர்த்திப் பிடிக்கும் தூதர்கள், ஆராதனைக் கூட்டங்களில் இருக்கின்றனர் என்பதாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதால் இவ்வாறு கூறப்பட்டிருக்கலாம் (சங்கீதம் 138:1ஐக் காணவும்). கும்ரான் இலக்கியத்தில் இதற்கு இணை கருத்துக்கள் உள்ளன.[10]

3. இவ்விடத்தில் பவுலின் போதனை, 1 கொரிந்தியர் 14:34ல் ("சபைகளில் உள்ள ஸ்திரீகள் பேசாதிருக்கக்கடவர்கள்; …" என்ற) மற்றும் 1 தீமோத்தேயு 2:12ல் ("உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" என்ற) அவரது அறிவுறுத்தலுக்கு நேர்மாறானதாக இருக்கிறதா? இல்லை; ஏனென்றால், அந்த வசனப்பகுதிகளில் அவர், சபைகளில் பெண்கள் அமைதியாய் இருக்க வேண்டியது பற்றிப் பேசினார்,[11] மற்றும் இந்த வசனப்பகுதியில் அவர், சபைகளில் பெண்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டியது பற்றிக் குறிப்பிட்டார். இருப்பினும், 1 கொரிந்தியர் 11:5, பெண்ணின் ஜெபம் மற்றும் தீர்க்கதரிசனம் உரைத்தல் பற்றிப் பேசுகிறதில்லையா? ஆம்; ஆனால் பவுல் அங்கு குறிப்பாக, ஆவிக்குரிய கொடைகளைக் குறிப்பிட்டார். ஆவியானவரின் வழிநடத்துதலில் பெண் ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் கூறும்போதுகூட, அவள் தன்மீது முக்காடு அணிந்தே அதைச் செய்ய வேண்டும்.

4. முக்காடு அணிதல் பற்றிய பவுலின் போதனையானது இன்றைய நாட்களில் எவ்வாறு நடைமுறைக்கு ஒத்துவருகிறது? என் கருத்தில், அது நடைமுறைப்படுவதில்லை. கொரிந்து நகரத்துப் பெண்கள் சபைகூடிவருதலில் முக்காடு இல்லாமல் இருத்தல் என்பது அவர்களின் சமூகத்தில் அதிர்ச்சிக்குரியதாகவும் வெட்கக்கேடானதாகவும் இருந்தது, அது அவள் தனது முடியை ஒரு வேசியைப்போல் வெட்டிக் கொள்ளுதலுடன் ஒப்பிடப்படுமளவுக்குத் தன்னடக்கம் இல்லாத தன்மையாய் இருந்தது. இன்றைய நாட்களில், பெரும்பாலான சமுதாயங்களில், ஒரு பெண் தலையை மூடாமல் வருவதோ அல்லது அவள் தனது தலைமுடியை வெட்டிக்கொள்வதோ, அதிர்ச்சியளிக்கும் அல்லது ஒழுக்கவீனமான செயலாக இருப்பது இல்லை. "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு

*வாழ்த்துங்கள்" (ரோமர் 16:16அ) என்பது இன்று மாறியுள்ள கலாச்சாரமாக உள்ளது, மற்றும் இவ்விடத்தில் பவுல், நமது சமூகத்திற்கு அர்த்தமற்றதாக உள்ள இன்னொரு கலாச்சாரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.*

*5. நீண்ட மற்றும் குட்டையான முடி பற்றிய பவுலின் போதனை, இன்றைய நாட்களிலும் நடைமுறைப்படுகிறதா? ஆம், ஆனால் நீளம் என்றால் எவ்வளவு நீளம், குட்டை என்றால் எவ்வளவு குட்டை என்ற கேள்வி எப்போதுமே வருகிறது. விஷயம் சார்பு நிலையுடையதாகும். பவுலேகூட இதை ஒரு சமூகவியல் வட்டாரத்திற்குள்தான் இட்டிருந்தார் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தின்மீதான முழு விவாதமும், கொரிந்தியர்கள் எவற்றைத் தகுதியானதும் பொருத்த மானதுமென்று முடிவு செய்திருந்தனர் என்பதைப் பற்றியதாக இருந்தது. பவுல், "சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா?" என்று கேட்டார் - இதன்மூலம் அவர், இயற்கைச் சட்டங்களையல்ல, ஆனால் இயல்பான உணர்வுகளையே அர்த்தப்படுத்தினார். இது அவரது "உங்களை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்" என்ற வகையிலான விவாதத்துடன் வைக்க வேண்டியதாக உள்ளது. இன்றைய நாட்களில் நாம் முடியின் நீளம் மற்றும் இவைபோன்ற விஷயங்களின்மீது பலத்த முன்தெரிவுகளைக் கொண்டிருப்பினும், (அந்த சமுதாயத்துடன் தொடர்புடைய வகையிலான) பவுலின் சமூகவியல் விவாதத்தை இன்றைய நாட்களில் உள்ள மக்களுக்கு ஒழுக்கரீதியான கட்டுப்பாடாகக் கட்டுவித்தல் என்பது சரியானதாக இருக்காது.*

## முடிவுரை

*கொரிந்து நகரில் இருந்த சூழ்நிலையில், அதைப் பற்றிய பவுலின் போதனையும், பல யோசனைகளை முன்வைக்கின்றன. ஒரு சில அடையாளத்துவத் தூண்கள் மாத்திரம் உள்ள சாலையின் வழியே முன்னேறிச் செல்லுதல் என்பது சிரமமானதாக உள்ளது, ஆனால் குறிப்பிட்ட சத்தியங்கள் தெளிவானவைகளாயுள்ளன. கிறிஸ்தவமானது பெண்ணைப் பெண்ணாயிருக்கக்கூடாதபடி செய்வதற்காக வரவில்லை. அது அவளை பெண் என்ற வகையில் உயர்த்தி கண்ணியப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் ஆணென்றும் இல்லை பெண்ணென்றும் இல்லை என்பது உண்மையானதாகவே உள்ளது. அவ்வசனப்பகுதியின் முழுக்கூற்று பின்வருமாறு: "யூதனென்றுமில்லை கிரேக்கனென்றுமில்லை, அடிமை யென்றுமில்லை சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றுமில்லை பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றீர்களே" (கலாத்தியர் 3:28). பவுல், யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையில் நிலவிய புறம்பான வேறுபாடுகளை புரிந்து கொண்டிருந்தார். அவர், எஜமானராயிருந்த பிலேமோனுக்கும், அடிமை யாய் இருந்த ஒநேசிமுவுக்கும் இடையில் வித்தியாசப்படுத்தினார். இங்கு கொரிந்தியர்களுக்குப் பவுல், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை காணப்படும்படி வைக்கக் கூறினார். அவரது விவாதமானது சமூகவியல் சார்ந்ததாக மாத்திரம் அல்ல, ஆனால் அது*

இறையியல் ரீதியானதாகவும் இருந்தது, அது மீண்டும் மீண்டும் படைப்பின் முறைமையிடமாய்த் திரும்பிற்று. கலாச்சாரத்திற்கு நேரெதிரான வகையில், படைப்பின் முறைமையானது எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் மதிப்புடையதாக உள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெளிப்புறத்தில் வேறுபாடுகள் உள்ளன, இந்த வேறுபாடுகள் எப்போதுமே வைக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், கிறிஸ்துவுக்குள் - ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால் - எல்லாரும் ஒன்றாக இருக்கின்றோம். கிறிஸ்துவின் மதமானது எல்லா மக்களையும் ஒன்றுகூட்டுகிறது.

---

குறிப்புகள்

[1]This excerpt by Neil R. Lightfoot has been adapted and reprinted by permission of the author. [2]Charillus, *Sayings of Spartans*, 2. [3]Plutarch, *The Roman Questions*, 14. [4]Ibid. [5]Sir William Ramsay, *The Cities of St. Paul* (London: Hodder and Stroughton, 1907; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1960), 201-05, இராம்சே அவர்கள் இரண்டாவது நூற்றாண்டின் தொடக்கத்தின்போது எழுத்தாளராயிருந்த தியோ கிறிசோஸ்தோம் என்பவரின் எழுத்தாக்கங்களில் இருந்து கருத்தைப் பெற்றார். [6]Jeremias, *Jerusalem in the Time of Jesus*, 359-60. [7]முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பது பற்றிய பல்வேறு பழங்காலக் கலாச்சாரங்களைப் பற்றிய ஒரு நல்ல ஆதாரமூலமாகப் பின்வரும் புத்தகம் உள்ளது: *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 3: 562. [8]Plutarch, *Sayings of Romans*, 13. [9]Compare with *Thelogical Dictionary of the New Testament*, 2: 574. [10]J. A. Fitzmyer, "A Feature of Qumran Angelogy and the Angles of 1 Cor. 11:10," *New Testament Studies* (1957), 4: 48-58; H. J. Cadbury, "A Qumran Parallel to Paul," *Harvard Theological Review* (1958), 51: 1-2.

[11]J. W. Roberts discussed 1 Timothy 2 referring to the assembly in *Letters to Timoth*y, The Living Word Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1961), 19.

# 1 கொரிந்தியர் 11ல்

## J. W. மெக்கார்வி[1]

கொரிந்து நகரத்தில் கிரேக்கர்கள், ரோமர்கள் மற்றும் யூதர்கள் ஆகியோர் வாழ்ந்திருந்தனர்; அந்த நகரத்து மக்கள் தொகையின் இம்மூன்று கூறுகளுமே அங்கிருந்த சபையிலும் காணப்பட்டன, மற்றும் அந்த சபையாருக்குப் பவுல் நிருபங்களை எழுதினார். யூதரும் ரோமரும் தலையை மூடிக்கொண்டு ஆராதனை செய்தனர்; கிரேக்கர்கள், தலையை மூடாமல் ஆராதனை செய்தனர். இதனால், எந்தக் கலாச்சாரம் சரியானது என்று இயல்பாகவே ஒரு வழக்கு எழும்பியிருக்கும். மேலும், ஆவிக்குரிய வட்டாரத்தில் ஆணென்றும் இல்லை பெண்ணென்றும் இல்லை (கலாத்தியர் 3:28) என்ற கொள்கைக்கு அங்கிருந்த பெண்கள் நன்கு பழக்கமாகியிருப்பார்கள் என்பதில் சந்தேகமும் இல்லையென்ற நிலையில், அவர்களில் சிலர் கிரேக்கர்களின் பழக்கவழக்கத்தின்படி, முக்காடு இடாத தலையுடன் ஆராதனையில் கலந்து கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்தி, ஒரு பக்கத்தினருடன் சேர்த்து கொண்டதால் அவர்கள் குழப்பத்தை இன்னும் கூடுதலாக்கியிருப்பதாகக் காணப்படுகிறது. பவுலின் நாட்களில் கிழக்கத்திய நாடுகளில், பொதுக்கூடுகைகளுக்குச் செல்லும் எல்லாப் பெண்களும் தங்களின் தலையை முக்காடு இட்டு மூடிய நிலையிலேயே சென்றனர், இந்த மூடாக்கு அல்லது முக்காடு என்பது கீழ்ப்படிதலின் உறுதிச்சின்னமாகக் கருதப்பட்டது, இது பெண்ணானவள் ஆணின் அதிகாரத்தின்கீழ் இருந்தாள் என்பதற்கான அடையாளமாகவும் கருதப்பட்டது. இவ்விதமாக, பயணியான கார்டின் என்பவர், பெர்சியாவின் பெண்கள் “கீழ்ப்படிதலின் கீழ்” இருந்தனர் என்பதற்கு அடையாளமாக அவர்கள் ஒரு முக்காட்டை அணிந்தனர் என்று கூறினார். இதே உண்மையைத்தான் இந்த அதிகாரத்தில் பவுலும் உறுதிப்படுத்தினார்.

பெண்ணின் தலையணியினுடைய அடையாளத்துவத் தனிச்சிறப்பு என்பது இவ்வழக்கில் தீர்மானம் செய்யும் காரணியாயிற்று. ஒரு ஆண், முக்காடு இட்ட தலையுடன் ஆராதித்தல் என்பது பெண்தன்மையுடைய ஒரு செயலாக, அவனது தலைக்குக் கனவீனம் உண்டாக்குவதாக இருந்தது; மற்றும் ஒரு பெண், முக்காடு இடப்படாத தலையுடன் ஆராதித்தல் என்பதும் அதேபோன்று கனவீனமானதாகவே இருந்தது, ஏனெனில் அது உத்தரவாதமற்ற சுயாதீனத்தைத் தைரியமாய் உறுதிப்படுத்துதலாக, அவள் தனது தன்னடக்கத்தைப் புறம்பே தள்ளிவிட்டு தன்னை அவளது வட்டாரத்தில் இருந்து நீக்கிப்போடுவதின் அடையாளமாக இருந்தது.

இவ்வசனப்பகுதியில் இருந்து, கிறிஸ்தவமானது தேவையற்ற வகையில் அந்தந்த நாட்களின் தேசீயக் கலாச்சாரத்தில் இருந்து மாறுபட்டிருக்க

நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. தேவையற்ற புதுக்கருத்துக்களை அறிமுகப்படுத்துதல் என்பது ஏற்கனவே உபத்திரவத்திற்கு உட்பட்டுக்கிடந்த கிறிஸ்தவர்களின்மீது தவறான கருத்துக்களைக் கூட்டுவதாக இருந்தது. கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற ஒருவர் தம்மை, ஒருமைத்தன்மையின் எவ்விதத் தந்திரத்தையும் செயல்படுத்தாமல், உலகத்தில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டிருப்பவராகக் காண்பார். பவுல் பின்வருமாறு எழுதினார்,

> *ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால், தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள் (வசனங்கள் 5, 6).*

முக்காடு இட்டுக்கொள்ளாத பெண்ணின் தலைமயிர் சிரைக்கப்பட வேண்டும் என்று பவுல் கட்டளையிடவில்லை, ஆனால் அது தர்க்கவியல் ரீதியான மற்றும் ஏளனத்திற்குரிய நிலைப்புத்தன்மையென்ற வகையில் வேண்டுகோள் விடுத்தார். ஒரு பெண், வேண்டுமென்றே தனது முக்காட்டை ஒதுக்குதல் என்பது, அவளது கணவர் அவள்மீது கொண்டுள்ள அதிகாரத்தை அவள் வெளிப்படையாக மறுத்தலாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு மறுப்பு அவளை, கத்தரிக்கப்பட்ட தலைமுடியினால் வெட்கங்கெட்ட தன்மையைக் காண்பிக்கும் விலைமகளின் நிலைக்கோ அல்லது தலைமயிர் சிரைக்கப்படுதல் என்பதைத் தண்டனையாகப்பெறும் விபசாரியின் நிலைக்கோ தாழ்த்தியது. ஆகையால் பவுல், தாழ்ந்த நிலையை நாடுகின்றவர்கள் அந்த நிலையின் எல்லா அடையாளங்கள் மற்றும் பட்டிகள் யாவற்றையும் அணியச் சம்மதிக்கின்றனர், அவர்கள் அந்த நிலையிலிருந்து மேல்நோக்கி உயர வெட்கப்படுகின்றனர் என்று கூறினார்.

மனித பழக்க வழக்கத்தில் இருந்து இவ்விதமாக ஒரு சட்டத்தை நிதானித்து அறிந்த பவுல், அதே சட்டமானது தெய்வீக மற்றும் படைப்பாக்கமுள்ள உறவுமுறைகளில் அமைந்துள்ளது என்று காண்பித்தார்: "புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமா யிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டியதில்லை; …" (வசனம் 7). ஆண் தனக்கு மேலாக படைக்கப்பட்ட எவரொருவரையும் கொண்டிருப்பதில்லை (ஆதியாகமம் 1:27; சங்கீதம் 8:6). அவனது படைக்கப்பட்ட இயல்பின் காரணம் அறிவினால் உண்டான மகிமைக்குக் கூடுதலாக, அவனது நிலையானது தேவகுமாரனின் அவதாரத்தினால் கண்ணியப்படுத்தப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டுள்ளது (எபிரெயர் 1:2, 3), எனவே, கிறிஸ்துவுடன் அவன் கொண்டுள்ள ஐக்கியத்தின் காரணமாக, அவன் பிதாவின் பிரசன்னத்தில் முக்காடு இன்றி நிற்கலாம். ஆகையால்,

ஆராதனையின்போது அவன் தன் தலையை மூடிக்கொள்ளுதல் என்பதன்மூலம், அவன் கிறிஸ்துவுடன் மகிமையைப் பங்கிட்டுக்கொள்ளும் உரிமையை அடையாளத்துவமாக இழந்து போகிறான், மற்றும் அவன் இவ்வாறு தன்னையே கனவீனப்படுத்திக் கொள்கிறான். நாம் இனியும் அடிமைகளாயிராமல், புத்திரர்களாய் இருக்கின்றோம் (கலாத்தியர் 4:7). தெர்த்துல்லியன் என்பவர், "கிறிஸ்தவர்களாகிய நாம், எவ்வித இடர்பாடுமின்றி கைகளை விரித்து ஜெபிக்கின்றோம்; மூடப்பட்டிராத தலையுடன் இருக்கும்போது வெட்கப்படாதவர்களாக இருக்கின்றோம்; தூண்டுபவர் எவருமின்றி, இருதயத்தில் இருந்து ஜெபிக்கின்றோம்" என்று கூறினார்.

> ... ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள் [ஆதியாகமம் 2:18, 21, 22 ஆகியவற்றைக் காணவும்]. ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் (வசனங்கள் 7-10).

இவ்விடத்தில் பவுலின் விவாதமானது பின்வருமாறு ஓடுகிறது: "நான் உங்களுக்குக் கொடுத்துள்ள சட்டமானது அடையாளத்துவத்தின்மீது அமைந்துள்ளது - இது மனைவியின் கீழ்ப்படிதல் என்ற அடையாளமாகும். இந்த அடையாளத்துவம் சரியானதாகவே உள்ளது; ஏனெனில், ஆண் தேவனிடத்திலிருந்து உண்டானது போல், அவன் தேவனுடைய சிறு பிரதிநிதித்துவமாக வடிவமைக்கப்பட்டதுபோல், பெண் ஆணிடத்தி லிருந்து உண்டாகி, அவனது சிறு பிரதிநிதித்துவமாக இருக்கின்றாள். ஆண் அவளுக்காகப் படைக்கப்படவில்லை, ஆனால் அவள்தான் அவனுக் காகப் படைக்கப்பட்டாள் என்ற உண்மையிலிருந்து, அவளது சிறு நிலை உறுதியாகிறது. ஆகையால், இந்த அடையாளத்துவத்தின் காரணமாகப் பெண்கள் ஆராதனை இடத்தில் முக்காடு இன்றி இருக்கக்கூடாது; மற்றும் அவர்கள் இது அடையாளப்படுத்துகிற கீழ்ப்படிதலின்றி இருக்கக்கூடாது, ஏனென்றால் இது படைப்பின் மாற்றப்பட இயலாத உண்மையின்மீது அமைந்துள்ளது. கீழ்ப்படிதலின் இந்த நியாயப்படுத்தப்படக் கூடிய மற்றும் நன்கு நிலைநாட்டப்பட்ட அடையாளத்தைக் கைவிடுதல் என்பது பணிவிடை செய்யும் கீழ்ப்படிதலுள்ள தூதர்களுக்கு அதிர்ச்சியானதாக இருக்கும் (ஏசாயா 6:2), இவர்கள் காணப்பட முடியாதவர்களாய் இருப்பினும், உங்கள் ஆராதனை இடங்களில் எப்போதும் இருக்கின்றனர்." (மத்தேயு 18:10; சங்கீதம் 138:1; 1 கொரிந்தியர் 4:9; 1 தீமோத்தேயு 5:21; பிரசங்கி 5:6 ஆகிய வசனங்களைக் காணவும்.) இவ்விடத்தில் பவுல், பழைய ஏற்பாட்டின் மதரீதியான சத்தியங்களை நியாயப்படுத்துவதுடன், அதன் வரலாற்று ரீதியான உண்மைகளையும் நிச்சயப்படுத்தினார்.

> ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷ

> *னில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது (வசனங்கள் 11, 12).*

*7ம் வசனத்தில் உள்ள கூற்றினால் எந்த ஒரு மனிதரும் மேட்டிமையினால் வசப்படுத்தப்பட்டு, ஆணுக்கு மேலாக தேவனும், பெண்ணுக்கு மேலாக ஆணும் உயர்த்தப்பட்டுள்ளவற்றிற்கு இடையில் உள்ள விகித அளவினால் கவரப்பட வேண்டுமா? ஆண்களும் பெண்களும் பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்துள்ளனர், எனவே அவர்கள் ஏறக்குறைய சமமானவர்களாகவே இருக்கின்றனர் என்பதைக் காண்பிக்கப் பவுல் இந்த வார்த்தைகளைக் கூடுதலாகக் கூறினார், ஆனால் சிருஷ்டிகர் என்ற வகையில், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டுள்ளார். ஆகையால், விகிதாச்சாரம் என்ற கருத்து முற்றிலும் தவறுதலாக வழிநடத்துவதாக உள்ளது. பெண்கள் முக்காடு இடவேண்டும் மற்றும் ஆண்கள் முக்காடு இடத்தேவையில்லை என்பதற்கு ஏற்கனவே தரப்பட்ட இரண்டு காரணங்களுடன் பவுல் இன்னும் இரண்டு காரணங்களையும் கூட்டினார்:*

> *ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே (வசனங்கள் 13-15).*

*பெண்ணின் தலையானது ஆணின் தலையைவிடத் தகுதியான முறையில் மூடப்பட்டிருக்கிறது என்பதை நமக்கு உள்ளுணர்வு போதிக்க வேண்டும், ஏனெனில் இயற்கையானது அதை ஏராளமான முடியைக் கொடுப்பதன்மூலம் அங்கீகரிக்கிறது. பவுலின் நாட்களில், ஒரு ஆண் நசரேயவிரதம் போன்ற பொருத்தனை செய்திருந்தால் ஒழிய, அவனது தலைமுடியானது சீராகக் குறுகியதாக வெட்டப்பட்டிருந்தது. ஆண் தன் தலையில் நீளமாக முடியைக் கொண்டிருத்தல் என்பது அவனுக்குச் சிறுமையின் அடையாளமாகவும், பெண்தன்மையை எடுத்துரைப்பதாகவும் இருந்தது, அவ்வாறு முடியமைப்பைக் கொண்டிருப்பவர்கள் அந்த நாட்களின் எழுத்தாளர்களால் கடிந்துரைக்கப்படுவதை நாம் காணுகின்றோம். இயற்கையானது, ஒரு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு அதிகமான மூடுதலைக் கொடுத்திருப்பதால், அவளது மனவிருப்பமானது இயற்கையோடு இசைந்திருக்க வேண்டும், மற்றும் மறுதலையான கருத்தும் கவனிக்கப்பட வேண்டும். ஆண்தன்மையுள்ள பெண்ணும், பெண்தன்மையுள்ள ஆணும் ஆட்சேபனைக்குரியவர்கள் ஆவர். ஒவ்வொரு பாலினமும் தன் தன் இடத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். உடையணிதல் பற்றிய*

*கருத்தில், ஆண்களும் பெண்களும் பொது இடங்களில் ஒருவர் மற்றவர் போன்று உடையணிந்து காணப்படுதல் என்பது இன்னமும் கனவீனமானதாக உள்ளது.*

*பவுல், "ஆகிலும் ஒருவன் வாக்குவாதம் செய்ய மனதாயிருந்தால் [இது, 'எந்த ஒரு ஆணும் அப்படியிருந்தால்' என்று மென்மையாகக் கூறும் வழி யாக உள்ளது], எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்'' என்று முடித்து வைத்தார் (வசனம் 16). கிரேக்கர்களின் விவாதம் செய்யும் ஆவியைப் பற்றியும், பவுல் நேர்மா றானதற்கு மூன்று காரணங்கள் கொடுத்திருந்த போதும், சிலர் இவ்விஷயம் பற்றி தர்க்கம் செய்ய விரும்புவார்கள் என்பதையும் உணர்ந்திருந்த பவுல், முன்கூறிய விஷயத்தைக் கலந்துரையாடலின் வட்டாரத்தில் இருந்து முற்றிலுமாக எடுத்துப்போட்டார். சபையில் தீர்த்து வைத்து நிலைநாட்டப்பட்ட நடைமுறையானது தொடக்கத்தில் இருந்தே, பவுலினால் வரைகுறிப்பிடப்பட்ட ஓட்டத்தைப் பின்பற்றியிருந்தது, இது இவரைத்தவிர மற்ற அப்போஸ்தலர்கள் இதை ஒரு சட்டத்தினால் நிலைநாட்டியிருக்க வேண்டும் அல்லது நடைமுறையில் அங்கீகரித்திருக்க வேண்டும் என்று காண்பித்தது. சீர்த்தன்மைக்கான இந்த வேண்டுகோளில் பவுல், எல்லா சபைகளும் தங்கள் நடைமுறையை மாறுபட்டதாக அல்ல ஆனால் சீரானதாக்கப் பிரயாசப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக்கினார். இவ்விடத்தில் பவுல், பொது இடத்தில் ஆராதனையில் வழிநடத்தும் வேளையில் ஆண்களும் பெண்களும் எவ்விதமாக உடையணிந்திருக்க வேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடினார். பிற்பாடு அவர், பொது ஆராதனையில் பெண்கள் இவ்விதமான பாகத்தை ஏற்று நடத்தலாமா கூடாதா என்பது பற்றிப் பேசினார் (14:34, 35; 1 தீமோத்தேயு 2:12).*

*இன்றைய நாட்களில் ஆண்கள், பவுலின் காரணங்களினிமித்த மாக அல்ல; ஆனால் அவரது அறிவுறுத்தலின் விளைவாகவே, முக்காடு இடப்படாத தலையுடன் ஆராதிக்கின்றனர். அக்காலத்தில் யூதர்கள் தங்கள் மிதியடிகளைக் கழற்றி வைப்பதால் பயபக்தியை வெளிப்படுத்தியது போலவே, இப்போது இதுவும் பயபக்தியின் வெளிப்பாடாக உள்ளது. எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும், கொள்கை என்பது ஒன்றுபோலவே உள்ளது: பெண்ணானவள் ஆணுக்குக் கீழ்ப்படிய வேண்டும், அவள் ஒழுக்கங்கெட்ட, தன்னடக்கமற்ற, தான் கொண்டிராத அதிகாரத்துவம் எதையும் காட்சிபடுத்தக் கூடாது.*

---

குறிப்பு

[1]This lesson is a reprint from J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians, and Romans*, Standard Bible Commentary (Cincinnati, Ohio: Standard Publishing Co., 1916; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 110-13. Adapted and used with permission.

# சபையில் பெண்ணின் பணிப்பொறுப்பு

## ஓவன் ஆல்பிரிக்ட்

*கடந்த முப்பது ஆண்டுகளில் - ஏறக்குறைய இப்போதில் இருந்து ஒரு தலைமுறைக்கு முன்புவரை சபையில் பெண்களுக்கு ஒப்புவிக்கப்படும் பணிப்பொறுப்புகளுக்கும் ஆண்களுக்கு ஒப்புவிக்கப்படும் பணிப்பொறுப்புகளுக்கும் இடையில் வேறுபாடு ஏதேனும் உள்ளதா அல்லவா அல்லது இருக்க வேண்டுமா என்று கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. பெண்ணிய ஆர்வமுனைப்பாளர்கள், முன்பு ஆண்களுக்கு மாத்திரம் என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு பணிப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்குப் பெண்கள் தகுதியாக்கப்பட வேண்டும் என்று நம்புகின்றனர். அவர்கள் சபையின் ஊழியத்திலும் ஆராதனையிலும் குறிப்பிட்ட சில வேலைகள் அல்லது "பதவிகள்" ஆண்களுக்கு [மாத்திரம்] தரப்படும் அதே வேளையில், மற்ற பணிப் பொறுப்புகள் மாத்திரம் பெண்களுக்குத் தரப்படுவது பற்றி அவமான உணர்வு அடைகின்றனர். அவர்கள், சபையில் பெண்களுக்கு நடத்துவப் பதவிகளைத் தருவதற்கு ஒருவகையான "உறுதியான செயல்பாட்டை" ஏற்படுத்த விரும்புகின்றனர்.*

## ஒரு தர அளவையைத் தேர்ந்தெடுத்தல்

*மனித முன்னுரிமை அல்லது மனச்சாட்சியைவிட உயர்ந்த தர அளவை எதையும் கொண்டிராதவர்களுக்கு, இந்தத் தலைப்பைத் சுற்றிச்சூழ்ந்துள்ள கேள்விகளுக்குப் பதில்கள் எதுவும் தேவைப்படுவதில்லை. உண்மையில், கேள்விகள் எதுவும்கூட எழுப்பப்படவேண்டியதே இல்லை. அப்படிப்பட்ட மக்கள் தாங்கள் விரும்பித் தேர்ந்து கொள்பவற்றின்படியே செய்கின்றவர்களாய் மாத்திரம் இருப்பார்கள், ஏனெனில், அப்படிச் செய்வதையே தேர்ந்து கொள்கின்றனர்.*

*மக்கள் தங்கள் சொந்த தர அளவையின்படி வாழ்கின்றபோது, இந்தக் கேள்விகுறித்துத் தேவன் ஒன்றும் செய்வதற்கில்லை மற்றும் இதற்கான பதில்மீது வேதாகமம் எந்தக் கருத்தும் கொண்டிருப்பது இல்லை. இவ்வகையான காரண அறிவில்/தர்க்கத்தில், ஆணும் பெண்ணும் மற்றும் காலமும், பெண்ணை ஆணின் பணிப்பொறுப்பில் விட்டுவிடுவர்.*

*பதினெட்டு நூற்றாண்டுகளாக, பல்வேறு மத அமைப்புகள் - உபதேசத்தின் பிறகருத்துக்களில் தங்களுக்குள் மாறுபட்டிருக்கையில் -*

ஆராதனை மற்றும் ஊழியம் ஆகியவற்றில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் பணிப்பொறுப்புக்கள் பற்றிய தங்களின் [வேதாகமத்திற்குப் புறம்பான] கருத்துக்களில் ஒருமைப்பட்டிருந்தன. ஏன்? இவ்விஷயங் களைத் தேவனுடைய வசனத்தில் கவனமாய் ஆராயும்போது, இவைகள் தவறான புரிந்துகொள்ளுதலை எதிர்த்து நின்றன என்பது மிகவும் தெளிவானதால் தான்.

ஒரு சகோதரி, பெண்ணியவாதப் புத்தகத்தில் இருந்து ஒரு சொற்றொடரை மேற்கோள் காண்பித்தார்: "உடற்கூறு என்பது அடைவிடமாய் இருப்பதில்லை." சில பெண்கள், தங்கள்மீது வேதவசனம் பொழிந்திருக்கிற அனுகூலங்கள், ஆதாயங்கள், பணிகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றில் திருப்தியாக இருக்க மறுத்துவிடுகின்றனர் என்று அந்தச் சகோதரி வலியுறுத்தினார்.

நம்மில், மதவிஷயங்களில் அதிகாரத்துவமான பதில்களுக்கு வேதாக மத்தைக் கண்ணோக்குபவர்கள் - பூமியில் தேவனுடைய சபையைக் கட்டியெழுப்புவதற்கு அவருடைய நிபந்தனைகளைக் கனப்படுத்துதலைக் குறித்து அக்கறையாய் இருப்பவர்கள் - இருபாலார் மீதும் ஏதேனும் வரைமுறைகள் விதிக்கப்பட்டுள்ளனவா என்பதைப் பற்றிக் கற்றறிய வேண்டும். வரைமுறைகள் நிலவுகின்றன என்றால், நாம் அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். இருப்பினும், தேவனுடைய கட்டளைகளின்படியே எல்லாவற்றையும் செய்யத் தீர்மானமாய் இருக்கின்றவர்கள் மத்தியிலும்கூட, நேர்மையான வேறுபாடுகள் எழும்புகின்றன. இவைகள், இவற்றிற்கு உரிய வேதவசனங்களை ஆழ்ந்து ஆராய்வதன்மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

## வேதவசன வழிகாட்டும் குறிப்புகள்

சபையில் ஆண்கள் மற்றும் பெண்களின் ஊழியத்தின்மீது வரைமுறைகள் ஏதேனும் வைக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை அறிவதற்கு 1 தீமோத்தேயு 2ம் அதிகாரம் ஒரு முக்கிய மான வசனப்பகுதியாக உள்ளது. அந்த சந்தர்ப்பப்பொருளில் பவுல், இருபாலாருக்கும் அறிவுறுத்துதல் கொடுத்தார். அவர் ஆண்களைப் பற்றிக் குறிப்பாக என்ன கூறினார் மற்றும் பெண்களைப் பற்றிக் குறிப்பாக என்ன கூறினார் என்பதில் விசேஷ கவனம் செலுத்தி நாம் அந்த விபரங்களைக் கவனிப்போம். தொடக்கத்தில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளையும் நாம் கவனிக்க விரும்புவோம், அவைகள் ஆங்கிலம் [அல்லது தமிழ்] மொழியில் உள்ளவற்றைக் காட்டிலும் மிகவும் சரியானதாக உள்ள கிரேக்க மொழியில் எழுதப்பட்டன.

> நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

*நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவ ராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது. இதற்காகவே நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப் பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பொய்சொல் லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் (1 தீமோத் தேயு 2:1-7).*

*"மனுஷன்" அல்லது "மனுஷர்" என்பதற்கான ஒரு வார்த்தையைப் பவுல் இந்த ஏழு வசனங்களில் நான்கு முறை பயன்படுத்தினார். அந்த நான்கு இடங்களிலும் அவ்வார்த்தை, "ஆண்" என்பதற்கான* anthropos *என்ற கிரேக்க வார்த்தையாகவே உள்ளது - அதாவது, இவ்வார்த்தை, ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்குகிற "மனிதகுலம்" அல்லது "மனித இனம்" என்பதாகும். இங்கு பவுல் பயன்படுத்திய வார்த்தையில் இருந்துதான் (மனிதகுலம் பற்றிய படிப்பு என்று அர்த்தப்படுகிற)* "anthropology" *என்ற வார்த்தை தரவழைக்கப்பட்டுள்ளது.*

*பவுல் பின்வருமாறு அறிவித்தார்,*

*அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும். ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 2:8-12).*

*ஆண்கள், பெண்கள், மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்கு அறிவுரை கூறியபின்பு பவுல், 8ம் வசனத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான குறிப்பிட்ட கடமைகளைப் பற்றிப் பேசுவதற்கு ஏறக்குறைய திடீரென்று தொடங்கினார். இந்த அதிகாரத்தின் எஞ்சியுள்ள பகுதி முழுவதிலும் அவர் தொடர்ந்து இதையே கலந்துரையாடினார். இங்கு அவர் "புருஷர்கள்" அல்லது "புருஷர்" என்று கூறியபோது, அவர் ஆண் அல்லது கணவர் என்பதற்கான குறிப்பிட்ட*

வார்த்தையைப் பயன்படுத்தினார். அவ்வார்த்தை இரு வடிவங்களைக் கொண்டுள்ளது: *aner* மற்றும் *andros*. இதே விதமாக, "ஸ்திரீ" அல்லது "ஸ்திரீகள்" என்று அவர் சொன்னபோது பவுல் பெண்ணுக்கு ஸ்திரீ அல்லது மனைவி என்பதற்கான குறிப்பிட்ட கிரேக்கச் சொற்றொடரைப் பயன்படுத்தினார்: *gune*, இதிலிருந்துதான் நாம் "gynecologist," அதாவது பெண்கள் அல்லது மனைவிகளுக்கான மருத்துவர் என்ற வார்த்தையைப் பெறுகின்றோம்.

**புருஷர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

பவுல், ஆண்களும் பெண்களும் கலந்த குழுவில் ஆராதனைக்கான அறிவுறுத்துதலைக் கொடுத்தபோது, ஆண்கள் தகுதியான விதத்திலும் தக்கவகையிலான ஆவிக்குரிய நிலையிலும் ஜெபிக்க வேண்டும் என்று கூறினார். அவர்கள் செயல்வலிவுள்ள ஜெபத்தை இடையூறு செய்யும் எண்ணப்போக்குகளைத் தவிர்க்க வேண்டும் என்று அவர்களுக்குக் கூறினார்.

புருஷர்கள்
பரிசுத்த கைகளுடனும்;
கோபமும், தர்க்கமும் இன்றியும்: ஜெபிக்க வேண்டும்.

**ஸ்திரீகளுக்கான அறிவுறுத்தல்கள்**

ஆராதனையில் சரியான நடக்கைக்கு, ஆண்களுக்கு அறிவுறுத்தல்கள் தேவைப்பட்டது போலவே, பெண்களுக்கும் தேவைப்பட்டது. ஆண்களும் பெண்களும் கலந்த குழுக்களில் ஆராதிப்பதற்குப் பெண்களுக்கு அறிவுரைகள் கொடுக்கப்பட்டன.

பெண்கள் தங்களை
தகுதியான வஸ்திரத்தினாலும்,
நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும்,
நற்கிரியைகளினாலும் அலங்கரித்துக் கொண்டு;
ஆடம்பரப் பின்னலிடப்பட்ட தலைமுடி, பொன்,
முத்துக்கள், விலையேறப்பெற்ற வஸ்திரங்கள்:
இல்லாமல் இருக்கவேண்டும்.

பெண்கள்
எல்லாவற்றிலும் அடக்கமுடையவர்களாயிருந்து:
அமைதலுடன் நிலைத்திருக்க வேண்டும்;
அவர்கள் உபதேசம் பண்ணுதல்,
ஆண்களின்மீது அதிகாரஞ்செலுத்துதல்:
ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

# வேதவசனரீதியான வழிகாட்டுதல்களுக்கு மறுசெயல்கள்

*இந்த போதனையின் விளைவாக, பவுலைப் பற்றி - மற்றும் தேவனைப் பற்றி - மிகக் கடுமையான சில விமர்சனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:*

*1. [இவ்விடத்தில்] பவுலின் போதனைகள் நேரடி அர்த்தமாகப் புரிந்துகொள்ளப்படலாகாது என்று சிலர் உரிமைகோருகின்றனர். கிறிஸ்தவ சபை கூடுகையில் சில கடமைகளை ஆண்கள்தாம் நிகழ்த்த வேண்டும் - அதே சபை கூடுகையில் அவற்றைச் செய்யப் பெண்கள் தடைவிதிக்கப் பட்டுள்ளனர் - என்று அவர் தனிப்பட்டவகையில் கூறியிருக்கும்போது அது எப்படி உருவகக்கூற்றாக முடியும்?*

*2. இந்தக் கட்டுப்பாடுகள் கலாச்சாரரீதியானவைகளாக மாத்திரம் உள்ளன என்று சிலர் கூறியிருக்கின்றனர். இவற்றிற்குப் பவுல் நிச்சய மாகவே கலாச்சாரரீதியான காரணங்களைத் தரவில்லை. அவர் ஒரு நேரடியான கட்டளையைக் கொடுத்தார், ஆண் மற்றும் பெண்ணின் படைப்புமுறையைக் குறிப்பிட்டார், மற்றும் முதல் பெண் நடத்துனரான போது இந்த உலகத்தில் பாவம் வந்தது என்று கூறினார். வீட்டில் தரித்திருத்தல் என்பதே பெண்ணுக்கு அடிப்படையான, தேவன் கொடுத்த இயல்பாக உள்ளது, மற்றும் அந்தப் பணிப்பொறுப்பில் அவள் இரட்சிப்பைக் கண்டடைகின்றாள் என்று அவர் உறுதிப்படுத்தினார். அது கலாச்சார ரீதியானதாக ஒலிக்கிறதா?*

*3. இன்னும் சிலர், பவுல் யூதத்துவ இரபீக்களின் ஒருதலைச் சார்பை மாத்திரம் பிரதிபலித்தார் என்று கூறியுள்ளனர். பவுல் தேவனால் ஏவுதல் செய்யப்பட்டார் (1 கொரிந்தியர் 14:37), மற்றும் அவரது அதிகாரத் துவத்தைப் பேதுரு அங்கீகரித்தார் (2 பேதுரு 3:15-17). அவரது போதனைகள் அவரது சொந்தமான போதனைகளாகவோ அல்லது ஒருதலைச் சார்புள்ள வைகளாகவோ இருக்கவில்லை.*

*4. சிலர், பல்வேறு வசனப்பகுதிகளில் பெண்கள் பற்றிய பவுலின் போதனைகள், நியாயமாய் இருக்கும் கருத்துணர்வு மற்றும் பெண்கள்மீதான தனிப்பட்ட வெறுப்பு ஆகியவற்றிற்கு இடையிலான அவரது உள்ளான போராட்டத்தைப் பிரதிபலிக்கின்றன என்று கூறியுள்ளனர். ஆம், ஒரு பரிசேயர் என்ற வகையில், பவுல் ஒரு நாளைக்கு மூன்றுமுறை ஜெபித்தார், தாம் ஒரு புறஜாதியானாகவோ, ஒரு அடிமையாகவோ அல்லது ஒரு பெண்ணாகவோ இல்லாதற்காக அவர் தேவனுக்கு நன்றி செலுத்தினார். இருப்பினும், இதே மனிதர், தமது மன மாற்றத்தைத் தொடர்ந்து, "யூதனென்றுமில்லை கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றுமில்லை சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றுமில்லை பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் (கலாத்தியர் 3:28). பவுல் மானிட மதிப்பைப் புரிந்துக்கொண்டார், மற்றும் ஒரு மனிதன் மற்றொரு மனிதனைப்போலவே விலைமதிப்புள்ளவன் என்பதை அவர் தெளிவாக்கினார்.*

*5. சிலர், பவுல் சந்தேகம் நிறைந்த வேதவசனங்களுக்கு வேண்டுகோள்*

விடுத்தார் என்று உரிமைகோருகின்றனர். அவரது வேண்டுகோளானது, தேவனால் ஏவுதல் பெற்ற தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்களினால் ஏற்படுத்தப்பட்ட தெளிவான கூற்றுக்களாகவே இருந்தது! அவர் படைப்பு பற்றிய ஆதியாகமத்தின் விபரத்திற்கும் மனிதகுலத்தின் தொடக்ககால வரலாற்றிற்கும் வேண்டுகோள் விடுத்தார். உண்மையில் ஆதியாகமம், திகைக்கவைக்கும் தெளிவாக்குதலுடன் மனிதனின் நிலையை விவரிக்கிறது.

6. கடைசியாக, சிலர் பாலினங்களின் உறவுமுறை பற்றிய இந்தக் கூற்றுக்களைப் பவுல் ஒருக்காலும் கூறியதில்லை என்று வாதிடுகின்றனர். இந்தப்பாடக்கருத்தின்மீது நாம் படிக்கும் வசனப்பகுதிகள் உண்மையில் பவுலினால் எழுதப்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட உரிமை கோருதல்களை ஏற்படுத்துகின்றவர்கள், இவ்வசனப்பகுதிகள் மோசடியானவைகளாய் இருந்தால், நாம் ஆராதனையைப் பற்றிக் கவலைப்படவேகூடாது என்பதைக் கவனிப்பதில்லை என்பதாகக் காணப்படுகின்றனர்! வேதவசனங்களில் நம்பிக்கையில்லாத நிலையில் நாம், கப்பற்பாயோ அல்லது திசைகாட்டும் கருவியோ இல்லாது கடலில் எல்லையற்ற வகையில் திசைமாறிச் செல்பவர்களாய் இருப்போம். இதே அப்போஸ்தலர் சபையைப் பற்றி எழுதினார் - அவர் சபையைக் கிறிஸ்துவின் சரீரம் என்றும், பூமியில் உள்ள இரட்சிக்கப்பட்டவர்களின் மொத்தக் கூட்டம் என்றும், இழந்துபோகப்பட்டுள்ள மனிதகுலத்திற்கு இரட்சிப்புண்டாகும்படி கிறிஸ்துவின் கருவியாயிருக்கிறதென்றும் விவரித்தார் - அவர் அந்த சபையின் ஒருங்கிணைந்த ஆராதனையைப் பற்றியும் எழுதினார். அவர் அந்த சபையின் நடத்துவத்துவம், அதன் நடைமுறை மற்றும் பாலினங்களுக்கிடையிலான உறவுமுறை ஆகியவை பற்றியும் ஏவுதல் பெற்ற அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளார்.

தேவன் ஒரு சில செயல்களை ஆண்கள் செய்யும்படி அனுமதித்து, அதையே பெண்கள் செய்யத் தடைவிதிப்பாரென்றால், அது அவருக்கு ஒழுக்கவீனமாயிருக்கும் என்று ஒரு சகோதரி கூறினார்கள்! அந்தப் பெண் மணியிடம் நான், "திருமணமாகாத ஒரு ஆணை மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ பணியாற்ற தடைசெய்வது தேவனுக்கு ஒழுக்கவீன மானதாக இருக்குமா?" என்று கேட்டேன்.

## வேதவசனரீதியான வழிநடத்துதலுக்குப் பின்னால் உள்ள பகுத்தறிவு

பவுலின் அறிவுறுத்துதல், கருத்தறிவற்ற அதிகாரத்துவத்தைச் செயல் படுத்துதலாக இருக்கவில்லை. அவர் தமது போதனைக்குப் பின்வரும் காரணங்களைக் கொடுத்தார்:

> என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு

> *விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் (1 தீமோத்தேயு 2:13-15).*

*புருஷன் (ஆண்) என்பவன் பொது ஆராதனையில் நடத்துவத்தைச் செயல்படுத்த வேண்டியவனாக இருக்கின்றான், ஏனெனில் (1) பவுலின் நேரடியான, ஏவுதல் பெற்ற கட்டளை, (2) படைப்பின் வரிசை முறைமை, (3) ஏதேன் தோட்டத்தில் நடத்துவத்தைப் பெண் ஏற்றுக்கொள்ள முன்வந்தபோது, அவள் வஞ்சிக்கப்பட்டது மற்றும் அதைத்தொடர்ந்து வந்த பேரழிவு, மற்றும் (4) தகுதிவாய்ந்த பெண்ணின் பணிப்பொறுப் பானது இல்லம்சார்ந்ததாக உள்ளது.*

*இந்த அறிவுறுத்துதல், ஆண்கள்மீது பெண்கள் அதிகாரஞ் செலுத்துதல் பற்றிப் பவுலின் பிற போதனைகள் யாவற்றுடனும் இசைவாயிருக்கிறது. பெண்கள் சில சூழ்நிலைகளில் போதிக்கவேண்டும். அவர்கள் பிரசங்கிக்கக் கூடாது, ஏனெனில் பிரசங்கித்தல் என்பது அதிகாரத்தைச் செயல்படுத்து தலினால் செய்யப்படுகிறது. 1 தீமோத்தேயு 2:11, 12ஐ தீத்து 2:15 உடன் ஒப்பிடவும்:*

> *ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 2:11, 12).*

> *இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக (தீத்து 2:15).*

*மூலபாஷையில், ''எல்லாவற்றிலும் அடக்கம்'' என்ற பவுலின் சொற்றொடரானது (1 தீமோத்தேயு 2:11), "அதிகாரத்தின்கீழ்" என்று அர்த்தப்படுகிற hupotage என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது.[1] தீத்துவுக்குப் பவுல், "சகல அதிகாரத்தோடும்" பேசும்படி கூறினார். இந்தச் சொல்விளக்கம் epitage என்பதாக உள்ளது, இது "அதிகாரத்தின்மேல்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. இவ்விதமாகப் பெண்ணானவள் அதிகாரத்தின்கீழ் இருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றாள், அதேவேளையில் பிரசங்கியார் தம் ஊழியத்தைச் சகல அதிகாரத்தின்மேல் செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றார். இந்த நேர்மாறு தவறவிட இயலாததாக உள்ளது. பெண்கள் சபைக்கூடுகையில் அதிகாரத்துடன் உரையாற்றக்கூடாது.*

## வேதவசனரீதியான வழிநடத்துதலை மதித்தல்

*வேதவசனங்கள், சபையில் பெண்களுக்கு ஏற்ற பணிப்பொறுப்பை*

நிலைநாட்டுவதற்குப் பல வழிமுறைகளை அளிக்கிறது. பின்வரும் வசனப்பகுதிகளில் நாம், பெண் ஆணுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று காணுகின்றோம்: (1) தெய்வீகப் படைப்பின் வரிசைமுறை (ஆதியாகமம் 2:7, 18-23; 1 கொரிந்தியர் 11:3); (2) தெய்வீகப் பிரமாணம் (ஆதியாகமம் 3:16; 1 கொரிந்தியர் 14:34); (3) குறிப்பிட்ட வகையில் அப்போஸ்தலிக்க கட்டளை (கொலோசெயர் 3:18; 1 தீமோத்தேயு 2:8-15); (4) அங்கீகரிக்கப்பட்ட உதாரணம் (1 பேதுரு 3:5); மற்றும் (5) உடல் மற்றும் உணர்வுரீதியான அமைவு (1 பேதுரு 3:7).

கீழ்ப்படிதலுடனான அவளது பணிப்பொறுப்பைப் புரிந்துகொள்ளுதல் எந்தப் பெண்ணையும் தாழ்ந்தவளாக்குவதில்லை. அது அவளைத் தேவனுக்குக் கீழ்ப்படிபவளாக்குகிறது! அவளது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தவறுதல் என்பது கலகம் விளைவித்தலாக உள்ளது. அது பாவமாகும்!

ஆண்/பெண் உறவுமுறைகள் 1 கொரிந்தியர் 11:3-9ல் தெளிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன:

கிறிஸ்து, ஆணுக்கும், தேவன் கிறிஸ்துவுக்கும் தலையாய் இருப்பது போன்றே, ஆண், பெண்ணுக்குத் தலையாயிருக்கின்றான். தலை என்பது மேலானதல்ல என்பதை ஒருவர் உணர்ந்தறியும்போது, இதிலிருந்து புண்படுதலோ அல்லது அவமானமோ வருவதில்லை. தலை என்பது [உடலைவிட] அதிக தகுதிவாய்ந்தது அல்ல. தலை என்பது நடத்துனராக, வழிகாட்டியாக மற்றும் ஆட்சியாளராக உள்ளது.

பெண் என்பவள் ஆணுக்குக் கீழ்ப்பட்டு இருக்க வேண்டும். கீழிருத்தல் என்பது தாழ்ந்திருத்தல் என்று அர்த்தப்படுவதில்லை. கீழிருப்பவர் என்பவர் ஒரு உதவியாளராயிருக்கின்றார், அவர் இன்னொருவரின் நடத்துவத்தின்கீழ் இருக்கின்றார், அவர் இன்னொருவரால் ஆளுகை செய்யப்படுகின்றார். வித்தியாசம் என்பது மதிப்பில் இல்லை. செயல்படுதலில்தான் வித்தியாசம் உள்ளது!

நாம் நியாயமாய் இருப்போமாக. பவுல், பெண்ணை சமையல் அறையில் கட்டிவைத்தாரா, துணிதுவைக்கும் இடத்தில் பூட்டிவைத்தாரா, படுக்கையறையில் அடைத்து வைத்தாரா அல்லது குழந்தைகள் காப்பிடத்தில் ஆணியறைந்தாற்போல் வைத்தாரா? இந்தக் கருத்துக்கள் எதையும் அவர் தெரிவிக்கவில்லை, ஏனென்றால் அவர் பெண்குலத்தை கனப்படுத்தினார் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஏவாளின் குமாரத்திகள் பலர் அளித்துள்ள பங்களிப்புகளைப் பாராட்டினார். பல பெண்கள் பவுலுக்கே மாபெரும் உதவியாய் இருந்துள்ளனர். மேலும், பவுல் இந்தக் கண்ணோக்கை முன்வைப்பதில் தனிமையாய் இருக்கவில்லை. பவுலோ அல்லது வேதாகமப்புத்தகங்களை எழுதிய மற்றவர்களோ, பெண்குலம் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று கூறியவற்றுடன், அதே எழுத்தாளர்கள் தேவனுடனும் ஆணுடனும் பெண் கொண்டுள்ள இசைவிணைவு பற்றிக் கூறிய எவையும் நேர்மாறாயிருப்பதில்லை.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயாலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக

*அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:27).*

*... "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமா யிருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்" (ஆதியாகமம் 2:23).*

*இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம் சமாயிருக்கிறார்கள் ... (மத்தேயு 19:6).*

*... சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை ... அவள் சகோதரருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தாள் (ரோமர் 16:1, 2).*

*ஆகிலும், கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல், புருஷனுமில்லை, புருஷனில் லாமல் ஸ்திரீயுமில்லை (1 கொரிந்தியர் 11:11).*

*யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்களே (கலாத்தியர் 3:28).*

*... புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான் (எபேசியர் 5:28).*

*அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லேவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் (2 தீமோத்தேயு 1:5).*

*அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமா யிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (1 பேதுரு 3:7).*

## முடிவுரை

வேதவசனங்களில், பெண்ணானவள் எப்போதுமே ஆணின் ஆளுகையின் (நடத்துவத்தின்) கீழ்தான் இருக்கின்றாள் (1 தீமோத்தேயு 2:8-15; 1 கொரிந்தியர் 11:12). இது மதிப்பு பற்றிய விஷயமாயல்ல ஆனால்

செயல்படுதல் பற்றிய விஷயமாயுள்ளது. அவளது கீழ்ப்படிதல் என்பது எவ்வகையிலும் அவளது கிறிஸ்தவ ஊழியத்தைத் தடைசெய்யக்கூடாது. ஆண்களுக்குக் குடும்பத்திலும் வெளியிலும் நடத்துவத்துவப் பணிப்பொறுப்புகள் ஒப்புவிக்கப்பட்டுள்ளன. எந்த ஒரு பெண்ணும் தேவன் தனக்கென்று நோக்கங்கொண்டிராத பணிப்பொறுப்பை ஆக்கிரமிப்பது போலவே, எந்த ஒரு ஆணும் தனது பணிப்பொறுப்பைப் புறக்கணிப்பதும் பாவம் நிறைந்ததாக உள்ளது. நமது தேவபக்தியுள்ள பெண்களை நாம் கனப்படுத்தி அவர்கள் தங்களைப்போன்றே இன்னும் அதிகமானவர்களைக் கொண்டுவரும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்துவோம்.

---

குறிப்பு

[1] "கீழ்" என்று அர்த்தப்படுகிற *hupo* என்ற வார்த்தையில் இருந்து *hypodermic* ("தோலுக்குக் கீழே") மற்றும் *hypothermia* (ஒருவரின் உடலானது சாதாரண வெப்பநிலையில் இருந்து அபாயமான அளவுக்கு மிகவும் கீழே இருக்கும் நிலை) போன்ற சில ஆங்கிலச் சொற்றொடர்கள் வருகின்றன.

# புதிய ஏற்பாட்டுப் பெண்கள்

*புகழ் பெற்றவர்கள்*

***அன்னாள்,*** *இயேசு அர்ப்பணிக்கப்பட்டபோது தேவாலயத்தில் இருந்தவள் (லூக்கா 2:36, 37).*

***மகதலேனா மரியாள்,*** *இயேசுவின் தாய் (லூக்கா 1:27-30).*

***மரியாள்,*** *கிலெயோப்பாவின் மனைவி, இயேசுவின் சிலுவையினருகே நின்று கொண்டிருந்தவள் (யோவான் 19:25).*

***மரியாள்,*** *இயேசுவுக்கு ஊழியம் செய்தவளும் அவரது கல்லறையருகில் "இருந்தவளும்" ஆவாள் (மத்தேயு 27:55-61).*

***மரியாள்,*** *யோவான் மாற்குவின் தாய் (நடபடிகள் 12:12).*

***தொற்காள்,*** *விதவைகளின் தோழி (நடபடிகள் 9:36-39).*

***சாலோமே,*** *யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் தாய் (மத்தேயு 27:55, 56; மாற்கு 16:1).*

***பிரிஸ்கில்லாள்,*** *தனது கணவர் ஆக்கில்லாவுடன் சேர்ந்து அப்பொல்லோவுக்குப் போதித்தவள் (நடபடிகள் 18:24-26).*

***பெபேயாள்,*** *ரோமாபுரியில் இருந்த சபைக்கு நிருபத்தை எடுத்துச் சென்று தந்தவள் (ரோமர் 16:1).*

***லீதியாள்,*** *பிலிப்பி நகரத்தில் இருந்த தேவபக்தியுள்ள பெண் (நடபடிகள் 16:14).*

*புகழ் அற்றவர்கள்*

***ஏரோதியாள்,*** *பிலிப்பு மற்றும் அந்திப்பா ஆகியோருக்கு மனைவி (மாற்கு 6:17-25) [அதாவது, இவளைப் பிலிப்பு திருமணம் செய்திருந்தான். பின்பு அந்திப்பா இவளைச் சேர்த்துக்கொண்டான்].*

***சாலோமே,*** *ஏரோதியாளின் மகள், யோவான் ஸ்நானனின் தலையைக் கேட்டவள் (மாற்கு 6:22).*

***சப்பீராள்,*** *அனனியாவின் மனைவி, தேவனிடம் பொய்யுரைக்கும்படித் தனது கணவருடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தவள் (நடபடிகள் 5:1).*

***யெயோதியாள்,*** *சிந்திக்கேயாள், "ஒரே சிந்தையாய்" இருக்கும்படி புத்திசொல்லப்பட்டவர்கள் (பிலிப்பியர் 4:2).*

***யேசபேல்,*** *தியத்தீராவில் இருந்தவள், கிறிஸ்துவின் ஊழியக்காரர்களை விலகிப்போகும்படி செய்தவள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:20).*

*எட் சாண்டர்ஸ்*

# ஒரு பெண் எவ்வாறு கிறிஸ்தவளாகின்றாள்?

## ஓவன் D. ஆல்பிரிக்ட்

*இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று முதன்முதலில் யோவான் ஸ்நானனே அடையாளம் கண்டார் என்றாலும் (யோவான் 1:29-34), [சமாரியாவில்] கிணற்றண்டையில் இருந்த பெண்ணிடம் தான் முதன்முதலில் இயேசு தாம் கிறிஸ்து என்று ஒப்புக்கொண்டார் (யோவான் 4:25, 26). அவள் பெயர் அறியப்படாத, சமாரியப்பெண்ணாக, யூதர்கள் தோழமை கொண்டிராதவளாயிருக்கின்றாள். இருந்தபோதிலும், இயேசு வேதாகமத்தின் மாபெரும் பாடங்களில் ஒன்றைப் போதிக்கக் கேட்கும் சிலாக்கியத்தை இவள் பெற்றிருந்தாள் (யோவான் 4:21-24). இவள் மனம் ஈர்க்கப்பட்டு, நகரத்தில் இருந்த மக்களிடத்தில் "அவர் கிறிஸ்துதானோ?" என்று கேட்டாள் (யோவான் 4:29).*

*ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதாக [பெயர்குறிப்பிட்டு] கூறப்பட்ட முதல் மற்றும் ஒரே பெண் லீதியாள் ஆவாள் (நடபடிகள் 16:14, 15). சிலர், அவள் லீதியா என்னும் பகுதியில் இருந்த தியத்தீரா என்ற நகரில் இருந்து வந்தவள் என்பதால் "லீதியாள்" என்பது அவளது பெயருக்குப்பதில் ஒரு பட்டப்பெயராகவே இருந்தது என்று நினைக்கின்றனர். இருப்பினும், வசனப்பகுதியானது அவள் "லீதியாள் என்னுடன் பெயருடைய ஸ்திரீ" என்றே குறிப்பிடுகிறது, இது அவளைப் பெயர் சொல்லிக்குறிப்பிடும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவள் என்று லூக்கா நினைத்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது. ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களில் மற்ற மூவரின் பெயர்களை மாத்திரமே லூக்கா குறிப்பிட்டார்: இயேசு (லூக்கா 3:21), சீமோன் (நடபடிகள் 8:13) மற்றும் சவுல் (நடபடிகள் 9:17, 18). அவர், ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட எத்தியோப்பிய மந்திரி (நடபடிகள் 8:27-39) மற்றும் சிறைச்சாலை அதிகாரி (நடபடிகள் 16:25-34) ஆகியோரையும் குறிப்பிட்டார், ஆனால் அவர்களின் பெயர்களைத் தரவில்லை. அவர் கொர்னேலியுவின் வீட்டாரும் ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டதைக் குறிப்பிட்டார் (நடபடிகள் 10:48).*

*லீதியாள் ஒரு தனிச்சிறப்பான பெண்ணாயிருந்திருக்க வேண்டும். அவள் வர்த்தகம் செய்யும் பெண்ணாயிருந்தாள் மற்றும் உயர்ந்த பதவியில் இருக்கும் அதிகாரிகளும் செல்வமிக்க குடிமக்களும் தங்கள் மதிப்பிற்கு அடையாளமாக உடுத்திய இரத்தாம்பரத்தை அவள் விற்றுக்கொண்டிருந்த*

தால், அவள் பெரும் செல்வம் கொண்டிருந்தாள் என்று யூகிக்கப்படுகிறது. அவள், பவுல், சீலா, தீமோத்தேயு, லூக்கா மற்றும் ஒருவேளை பவுலுடன் பயணம் செய்துகொண்டிருந்த மற்ற தோழர்கள் யாவரும் தங்கி இருக்கப் போதுமான அளவுக்குபெரிய வீடு ஒன்றைக் கொண்டிருந்தாள். அவள் வீட்டார் என்று கூறப்படுபவர்களில் வேலைக்காரர்களும் உள்ளடங்கியிருக்கலாம்.

பவுல் ஆசியாவில் இருந்த துரோவா நகரில் இருந்து பிலிப்பி நகருக்கு கடந்து சென்றிருந்தார், அங்கு அவர் லீதியாளையும் ஜெபத்தில் ஈடுபட்டிருந்த தேவனைத் தொழுதுகொள்ளும் மற்றவர்களையும் கண்டார். பவுலின் பிரசங்கத்தை அவள் கவனமாய்க் கேட்டபோது, அவளது இருதயம் கர்த்தரால் திறக்கப்பட்டது. சிலர், தேவன் தமது நேரடியான இடைப்படுதலால் அவளது இருதயத்தைத் திறந்தார் என்று கற்பிதம் செய்கின்றனர், ஆனால் மற்றவர்களின் இருதயங்களைப் போன்றே அவளது இருதயமும் பவுல் பிரசங்கித்த கர்த்தருடைய செய்தியால்தான் திறக்கப்பட்டது என்பதே மிகவும் ஏற்புடைய விளக்கமாக உள்ளது. இயேசு அப்போஸ்தலர்களின் சிந்தைகள்/மனங் களை அறிவுறுத்தலினாலே திறந்தார் (லூக்கா 24:45). யூத மக்களின் இருதயங்கள் பெந்தெகொஸ்தே நாளன்று, இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு கொடுத்த நிரூபணத்தினாலேயே தொடப்பட்டன, அவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர் (நடபடிகள் 2:37). பேதுரு, "நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று பதிலுரைத்தார் (நடபடிகள் 2:38).

பின்பு பேதுரு, இந்த வாக்குத்தத்தமானது "தூரத்தில் உள்ள யாவருக்கும்" கூட உரியது என்று குறிப்பிட்டார் (நடபடிகள் 2:39). பவுல், புறஜாதியாரைக் குறிப்பிடுவதற்கு "தூரத்தில்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார் (எபேசியர் 2:13). லீதியாள் "தூரத்தில்" இருந்தவர்களில் ஒருத்தியாவாள், இவள் சுவிசேஷ செய்திக்குத் தனது இருதயம் திறக்கப்பட்டதால், விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, இயேசுவின் நாமத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இவள் நம்பிக்கை நிறைந்த, உண்மையான வழிமுறையில் பவுலின் செய்திக்குப் பதில்செயல் செய்தாள். இவள் தனது பாவங்களை மன்னிப்பதற்கு இயேசுவின் இரத்தத்தின்மீதுள்ள விசுவாசத்தினால் ஞானஸ்நானம் பெற்றாள்.

பவுல் நிச்சயமாகவே, "ஞானஸ்நானத்திலே அவரோடே [கிறிஸ்துவோடே] அடக்கம்பண்ணப்பட்டு," "அவரோடே [கிறிஸ்துவோடே] உயிர்ப்பிக்கப்பட்ட," மற்றும் "(அவர்களின்) மீறுதல்கள் மன்னிக்கப்பட்ட" (கொலோசெயர் 2:12, 13) கிறிஸ்தவர்களுக்கு எழுதிய அதே செய்தியைத்தான் இவளுக்கும் போதித்திருப்பார். இவ்வாறு இவள் இயேசுவுக்குள் பிரவேசித்து, அவரைக் கொண்டு உடுத்துவிக்கப்பட்டாள் (கலாத்தியர் 3:27), மற்றும் கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கையைத்

*தொடங்கினாள் (ரோமர் 6:3, 4; 2 கொரிந்தியர் 5:17).*

*லீதியாளின் ''வீட்டார்'' ஞானஸ்நானம் பெற்றனர் என்ற உண்மையைச் சிலர், பச்சிளம் குழந்தைகள் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்பதற்கு ஆதாரமாகப் பயன்படுத்துகின்றனர். அப்படிப்பட்ட ஒரு கற்பிதத்தில் இரண்டு சிரமங்கள் எழுகின்றன. முதலாவது, பச்சிளம்குழந்தைகள் எவரும் இவ்வசனப்பகுதியில் குறிப்பிடப்படவில்லை. (பச்சிளம் குழந்தைகளைக் கொண்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கையானது பச்சிளம் கொண்டிராத இல்லங்களின் எண்ணிக்கையைவிட மிகவும் சிறியதாக இருந்தது.) இரண்டாவது, இவள் திருமணமாகாதவள் என்ற சுட்டிக்காண்பித்தல் இருந்தது. இவள் "எங்கள் வீட்டார்" என்பதற்கு மாறாக, தனக்குக் கணவர் இல்லை என்பதுபோல், "என் வீட்டார்" என்று குறிப்பிட்டாள்.*

*லீதியாள், ஐரோப்பாவில் முதன்முதலாக மனம்மாற்றப்பட்டு, சுவிசேஷத்தைக் கேட்பதற்குப் பல லட்சக்கணக்கானவர்களுக்குக் கதவைத் திறந்திருக்கலாம். மாண்புமிகுந்த இந்தப் பெண்ணின் உதாரணத்தைப் பின்பற்றுதல் என்பது நாம் நன்கு செயல்படுவதாய் இருக்கும். இவள் இயேசுவில் நம்பிக்கை வைத்து, இவளது கர்த்தரின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பகிர்ந்துகொண்டதினால் அவருக்கு உண்மை நிறைந்த பின்பற்றாளியானாள். அவ்வாறு செய்ததில் இவள், தனது கடந்தகால வாழ்விற்கு மரித்து, இயேசுவுக்கென்று புதிய வாழ்வைத் தொடங்கினாள் (ரோமர் 6:4).*